# வள்ளல் - யார்?
# வள்ளலார்!




## சிவ செல்வராஜ்

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

**17/49P, "தங்க ஜோதி"**

**கலைஞர் குடியிருப்பு - மாதவபுரம்,**

**கன்னியாகுமரி - 629 702**

**Cell : 92451 53454**

## பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | வள்ளல்-யார்? |
| ஆசிரியர் | : | சிவ செல்வராஜ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| உரிமை | : | S.S. சுயம்ஜோதி |
| வெளியிடுவோர் | : | சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>17/49P, "தங்கஜோதி", கலைஞர் குடியிருப்பு<br>மாதவபுரம், கன்னியாகுமரி - **629 702** |
| முதல் பதிப்பு | : | வைகாசி - 11, தர்மச்சாலை ஆரம்பித்த<br>142 வது ஆண்டு 25-05-2008<br>**2000** பிரதிகள் |
| காணிக்கை | : | ரூ. **50** |
| கிடைக்குமிடம் | : | ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில் - **629 001**<br>Ph **: 04652 - 221307**<br><br>N. கோபால் சாமிராவ்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>216, MRK சாலை, இந்திரா நகர்<br>(சகுந்தராம கல்யாண மண்டபம் அருகில்)<br>நெய்வேலி - **607 801.** Cell : **94438 76394** |
| | : | G. கோபாலகிருஷ்ணன்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>216, விஸிரி சாலை, இந்திராநகர்,<br>நெய்வேலி - 607 801, Cell : **94438 76394** |
| | : | G. நாராயணா<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>க.எண் **2, 4/110, 106**-வது தெரு<br>முத்தமிழ் நகர், கொடுங்கையூர்<br>சென்னை - **600 118**, Cell **: 98404 49867**<br><br>**சிங்கப்பூர்**<br>R. SIVA KUMAR<br>Block - 69, # 07-273<br>Telok Blangah Hts<br>**SINGAPORE - 100 069**<br>Tel : 65 - 98440090 |
| அச்சிட்டோர் | : | நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், |

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

17/49P, தங்கஜோதி, கலைஞர் குடியிருப்பு,
கன்னியாகுமரி - 629 702

## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நன்றி. நலமே நிலவுக. எல்லாம் வல்லவரான, எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால், சற்குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஆசியால், அடியேனை ஆன்மீக பாதையில் நடைபயில வைத்த கருணையின் திருஉருவம் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் தூண்டுதலால், அடியேன் 21-03-1992 இல் முதன்முதலாக கண்மணி மாலை என்னும் ஞானவிளக்கம் கூறும் நூலை ஞானிகள் ஆசியுடன் வெளியிட்டேன்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உள்ளிருந்து தூண்ட பற்பல கவிநூற்கள் ஆக்கினேன். இறைவனை சுட்டும் இனியபாக்களே என் கை எழுதியது! ஆன்மீக வழி காட்டும் அறிவுப் பாடல்களே! எனது பிரார்த்தனையும் கூடவே இணைந்தது.

இரண்டாவதாக 21-12-1995 அனுமன் ஜெயந்தியன்று தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்ஸர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய விநாயகர் அனுமன் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக மதுரை அன்பர் திரு. A. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக 23-01-1996 தோட்டியோடு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் குருபூஜையன்று, குருவருளால் அடியேன் எழுதிய ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக இரணியல் அன்பர் திரு. K. திருநீலகண்டன் அவர்கள் வெளியிட்டார்கள்.

நான்காவதாக 28-07-1996 பிரதோஷத்தன்று மருந்துவாழ்மலை ஓம் உன் திருவருளடி ஆனந்த காளிதாசன் சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ சுந்தரேஸ்வரார் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக ஆரல்வாய்மொழி ஜோதி குரு ஞானசபை அன்பர் சிவத்திரு இராமசாமி நாடார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஐந்தாவதாக 16-09-1996 விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ அறுகம்புல் சித்தர் நடராஜ சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ அறுகம்புல் சித்தி பால விநாயகர் துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக கோணம் ஸ்ரீ அறுகம்புல் சித்தர் தபோவன டிரஸ்ட்டார்

வெளியிட்டார்கள்.

ஆறாவதாக 13-10-1996 நவராத்திரி முதல் நாளில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 174-ஆவது திருஅவதார தின நன்னாளில் என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ ஆயுர்தேவி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக வேம்பனூர் அன்பர் திரு. P.K. மாதவன் நாயர் அவர்கள் நினைவாக அவர்தம் மனைவி திருமதி. M. ஹைமாவதி தங்கச்சி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏழாவதாக, 14-01-1997 பொங்கல் நாளில் அடியேன் எழுதிய தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்சர் போற்றி பாடல்கள், ஸ்ரீ அழகிய மணவாள விநாயகர் துதிகள் ஆக 108-ஐ இலவசப் புத்தகமாக பள்ளத்தூர் வாழும் உத்தம தம்பதிகள் திரு. S. தங்கமணி நாடார் திருமதி. S. தங்கப்பழம் நாடாச்சி ஆகியோர் வெளியிட்டார்கள்.

எட்டாவதாக 07-03-1997 மகா சிவராத்திரி திருநாளில் அடியேன் எழுதிய திருப்பன்னிபாகம் அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக, எனது தந்தை ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. K. சிவசுப்பிரணியபிள்ளை அவர்களின் 80 வயது நிறைவைக் கொண்டாடும் விதமாக எனது மகன் S.S. சுயம்ஜோதி Pre. K.G. அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒன்பதாவதாக பேயோடு, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக திருநாளில் 15-06-1997-ல் பேரருள் புரியும் பேயோடு ஸ்ரீ குருதவசி ஐயா பாமாலை 108-ஐ இலவச புத்தகமாக ஸ்ரீ குருதவசி ஐயா குடும்பத்தாராகிய பேயோடு ஊர் பொதுமக்கள் வெளியிட்டார்கள்.

பத்தாவது நூலாக, அடியேன் முதலில் வெளியிட்ட கண்மணிமாலை பல புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு 10-09-2002 விநாயகர் சதுர்த்தியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதினொன்றாவது நூலாக, சற்குரு வள்ளலார் தூண்டுதலால் அடியேன் அருள்மணி மாலை என்னும் ஞானவிளக்க நூலை எழுதி 18-02-2004 மஹா சிவராத்திரியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பன்னிரண்டாவது நூலாக அடியேனை காத்து இரட்சிக்கும் அகில உலக அன்னை, ஆதி சக்தி, கன்னிகா பரமேஸ்வரி, பாலா, வாலை, தாய், கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மனை வேண்டி பிரார்த்தித்து ஸ்ரீ பகவதி அந்தாதியை இயற்றி நாகர்கோவில் கெங்கா ஜூவெல்லர்ஸ் பேருதவியால் 23-06-2004 ஆனி-மகம் மாணிக்கவாசகர் குருபூஜையன்று அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி, மகாமாயை

கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதின்மூன்றாவது நூலாக, எல்லாம் வல்ல இறைவன் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் திறத்தைக்கூறி, அருள்புரியும் விதத்தை வெளிப்படுத்தி, அடியேன் உள்ளிருந்து சற்குரு வெளிப்படுத்தி அருளிய, ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி அந்தாதி என்னும் நூலை 25-01-2005 தைப்பூசத்தன்று திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ் உயர்திரு. S.R. முத்து கிருஷ்ணன் பேருதவியால் வடலூரில் தர்ம சாலையில் வெளியிடப்பட்டது.

பதினான்காவதாக சன்மார்க்க தெய்வம் எனும் நூலை நாகர்கோவில் ஜெயகுமாரிபுத்தகநிலைய உரிமையாளர் S. அசோக்குமார், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 80-வது பிறந்த நாளான 23-11-2005-ல் வெளியிடுகிற புண்ணியம் பெற்றார்.

பதினைந்தாவது நூலாக "சற்குரு கோவிந்த சுவாமிகள்" 30-12-2005 ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி திருநாளில் ஆரல்வாய்மொழி இராமலிங்க சுவாமி நிலைய அன்பர் ஜோதி ஸ்ரீ N. கனக சபாபதி அவர்களால் வெளியிடப்பட்டது.

பதினாறாவது நூலாக அடியேன் ஏற்கனவே இலவசமாக வெளியிட்ட எட்டு நூற்களைத் தொகுத்து "அஷ்டமணி மாலை" என்று 06-04-2006-ல் அடியேனின் 50-வது பிறந்தநாளில் நட்சத்திரத்தில், 1992-ம் வருட முதலே எம்மை ஆதரித்துக் காத்தருளும் என் உயிர் சென்னை அன்பர்கள் ஜோதி ஸ்ரீ த. முருகேசன், ஜோதி ஸ்ரீ G. நாராயணா ஜோதிஸ்ரீG. கோபால கிருஷ்ணன் ஆகிய மும்மூர்த்திகளும் வெளியிட்டார்கள்.

பதினேழாவது நூலாகவும், அடியேனின் பொன்விழா ஆண்டு வெளியீடாகவும், ஆன்மீக வெள்ளிவிழா ஆண்டுவிழா வெளியீடாகவும் "செல்வமே சீர் தாருமே" நூல் அடியேனின் 14 வருட திருமண நிறைவு நாளில் 08-04-2006-ல் எம் உயிரோடு கலந்துவிட்ட ஜோதி ஸ்ரீR. சிவலிங்கம் சென்னை அவர்கள் வெளியிட்டார்.

பதினெட்டாவது நூலாக "செந்திலாண்டவன்பாமாலை" 11-4-2006 பங்குனி உத்திர நாளில் என் வணக்கத்திற்குரிய பெரியவர் R. துரைசாமி அவர்களும் அன்பின் இனிய நண்பர் S.B. சுப்பையா அவர்களும் வெளியிட்டார்கள். நன்றி நன்றி.

பத்தொன்பதாவது நூலாக "அன்பு உதய மலர்" 14-4-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ இராஜப்பா வெளியிட்டு புண்ணியத்தை தேடிக் கொண்டார்கள்.

இருபதாவது நூலாக வள்ளலார் விழியே 14-04-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக, ஆசிரியரின் 50 வயது பொன் விழா வெளியீடாக, சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ கணேஷ் அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள். அவர்கள் இறைவன் அருளால்

சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ பிரார்த்திக்கின்றேன்.

இருபத்தோராவது நூலாக ஜோதிமணி மாலை 24-07-06 ஆடி அமா-வாசையன்று நெய்வேலி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க ஜோதி ஸ்ரீ நிர்மலா தேவி அவர்கள், மகன் ஜோதி ஸ்ரீ நகுலன், அவர்கள் மருமகள் ஜோதி ஸ்ரீ Dr. இரா. அருள்மொழி ஆகியோரது பரிபூரண அன்பால், உதவியால் வெளிவருகிறது.

இருபத்திரண்டாவது நூலாக ஜோதி ஐக்கூ அந்தாதி நம் இந்திய திருநாட்டின் 59வது சுதந்திரதினமான 15-08-2006ல் சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ கோபி சிவம் அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள்.

இருபத்து மூன்றாவதாக "சற்குரு ஜக்கி வாசுதேவ்" 2006 செப்டம்பர் ஈசா திருவிழாவின்போது நாகர்கோவில் அன்பர் பிரபாகர் வெளியிட்டு புண்ணியம் பெற்றார்கள்.

இருபத்து நான்காவதாக "சத்திய சாயி பாபா" 2006 நவம்பர் 23-ல் பாபாவின் 81-வது பிறந்த நாளில் நாகர்கோவில் சமிதி அன்பர் S. கிருஷ்ண பிள்ளை அவர்கள் வெளியிட்டு புண்ணியம் பெற்றார்.

இருபத்தைந்தாவது நூலாக 30-01-2007-ல் வள்ளலார் ஒளி வடிவாகி எங்கும் நிறைந்த 134 ஆண்டு பிறந்த தின வெளியீடாக "சனாதன தர்மம்" நூலை கன்னியாகுமரி சீடர்கள் சுயம்புகேசவன் இந்திராபாய் தம்பதியினரின் பெருங்கருணையால் வெளியிடப்பட்டது.

இருபத்தாறாவது நூலாக வள்ளல்-யார்?! எனும் இந்நூலை எழுத தூண்டியசிங்கப்பூரிலிருந்துவள்ளலார் புகழ் பரப்பும் அணுக்கத் தொண்டர் ஜோதி ஸ்ரீ A. சிவகுமார் அவர்களால் 24-05-2008 வைகாசி 11-ல், தர்மச்சாலை 142-வது ஆண்டு தொடக்க நாளில் வெளியிடப்பட்டது.

என்றும் எம்மைக்காத்தருளும் எல்லா தூய ஆத்மாக்களுக்கும் என்றென்றும் நன்றியுடையவன் ஆவேன்!

என்றும் உண்மையுள்ள,
**சிவ. செல்வராஜ்,**
கன்னியாகுமரி.

# என்னுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நலம். நன்றி. வாழ்க.

இன்றைய உலகம் எங்கே போகிறது? தான் யார்? என்பதை அறியாமல் - புத்தி தடுமாறி - புற உலகை அறிய முற்படுகிறான். மனிதன்! விஞ்ஞானம் பற்றி பேசுகிறான்! அஞ்ஞானி மெய்ஞ்ஞானம் உணராதவரை அறிவிலிதான்! பரிபூரண அறிவே ஞானம்!

பூரணம் என்றாலே முழுமை. முற்றும் அறிந்தவனே - உணர்ந்தவனே பரிபூரணன்! ஞானி!

தெள்ளத் தெளிந்தார்க்கு சீவனே சிவலிங்கம் என்கிறார் திருமூலர்.

சந்தேகமின்றி - தெளிந்தவனே எல்லாம் தெரிந்தவன் ஆவான்! அவனே எல்லார்க்கும் தெரிவிப்பான். அவன்தான் ஞானி!

இரக்கமே உருவானவன். கருணையே வடிவானவன். எவ்வுயிரையும் தம்முயிர் என கருதுபவன். அவனே ஞானி!

அப்படி ஒருவர் இருக்கிறாரா?

இருந்தாரா? இருக்க முடியுமா?

அப்படிப்பட்டவர்கள் உலகெங்கும் பலர்! பற்பல காலங்களிலும் வாழ்ந்திருக்கிறார்கள்! இன்றும் இறவாப் புகழ் கொண்டும், இறவா நிலை பெற்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் - எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த ஆதியும் - அந்தமுமில்லா, கருணை மழையான, வள்ளலான இறைவனை அறிந்தவர்கள் - உணர்ந்தவர்கள் ஆவார்கள்!

வள்ளல் - யார்? இறைவன்தான்! இவ்வுண்மையை அறிந்தவன் உணருகிறான்! உணர்ந்தவன் ஞானியாகிறான்! ஞானியானவன் “தான் அதுவாகவே” மாறுகிறான். தான் ஆகிய ஆத்மா அதுவாகிய பரமாத்மாவின் இயல்பை பெற்று விடுகிறது.

வள்ளலான இறைவனை உணர்ந்த மெஞ்ஞானி வள்ளலாராகிறார்!

வாழையடி வாழை என வந்த வள்ளல்கள் எத்தனை

எத்தனையோ!

19-ம் நூற்றாண்டிலே இப்படி ஒரு வள்ளல் தமிழ்நாட்டில் பிறந்து - வளர்ந்து - வாழ்ந்து - எல்லோருக்கும் வழிகாட்டி - விழிகளின் மேலாண்மையை உணர்த்தி - வள்ளலாராக - இன்றும் “அது”வான தன்மையான ஒளியாகி பேரொளியாகி எங்கும் நிறைந்திருக்கிறார்.

அவர்தான் திரு. அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் என மக்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

சுருக்கமாக “வள்ளலார்” என அழைக்கப்பட்டார் இராமலிங்கர். “தான் அதுவானால்” பின் “தான்” ஏது? “அது”தானே! அது இறைவன் தானே! வள்ளல் தானே!

“அது” எது என உணர்ந்த வள்ளலாராகிய இராமலிங்கர் உரைத்தது இது என இந்நூலில் தொகுத்துள்ளேன்!?

அவர் பெற்ற பேற்றை சொல்லி முடியாது. அவர்பட்ட பாட்டை - வேதனையை சொல்லில் வடிக்க இயலாது!

இத்துன்பம் இனி யாரும் பெறலாகாது என கருணையோடு, எளிதாக, நாமுய்ய நல்வழி காட்டியிருக்கிறார் வள்ளலார் இராமலிங்கர்!

அவ்வழி - நல்வழி - எவ்வழி என உரைப்பதே இந்நூல்!

அவ்வழி உணர்த்தி எல்லோரும் மரணமிலா பெருவாழ்வு பெற வழிகாட்டுவதே எமக்கு வள்ளலார் இராமலிங்கர் இட்ட பணி!

உள்ளே செல்லுங்கள்! உள் “அது”!

உள்ளதை அறியலாம்! உரைத்தபடி!

உணரலாம் வள்ளலாகலாம்!

வருக! வாழ்க!

# "உள்ளே இருக்குது"

க ஒரு மனிதன்

உ இரண்டின் மகத்துவம்

௩ மூன்று நிலையங்கள்

௪ நன்நாலும் கடந்த நிலை

ரு ஐந்தும் ஒன்றானது

௬ ஆறு ஆறுக்கு அப்பால்

எ ஏழாம் இடம்

அ எட்டை பிடி

# க ஒரு மனிதன்

சென்னை - திருவொற்றியூர் இரத வீதியிலே ஒரு நிர்வாண சந்நியாசி அமர்ந்திருந்து அவ்வழியே வருவோர் போவோரையெல்லாம் நாய் போகிறது, நரி வருகிறது, கழுதை போகிறது, பன்னி போகிறது, பாம்பு போகிறது எனக் கூறிக் கொண்டிருந்தார்.

இராமலிங்கர் அவ்வழியே வந்தபோது இதோ ஓர் உத்தமமான "மனிதன்" வருகிறான் என்றார்.

அவரவர் குணத்தை வைத்து மக்களை அழைத்துக் கொண்டிருந்த திகம்பர சாமியார் இராமலிங்கரை மனிதன் - உத்தமமான மனிதர் என்றார்.

மனிதனாக பிறந்து மிருகங்களாக வாழும் மாக்கள் மத்தியிலே இராமலிங்கர் மனிதனாக வலம் வந்தார்.

மனதை இதம் பண்ண தெரிந்தவர், மனம்போன போக்கிலே போகாமல், மனதை இறைவன்பால் செலுத்தி பக்குவப்படுத்தியவர்.

மனம் போன போக்கிலே போக வேண்டாம்" என்ற மூதிரைக்கொப்ப வாழ்ந்தவர் இராமலிங்கர். மனம் அடங்கும் ஓர் இடந்தனில் இருந்தும் அறியேன்" என்ற ஞானக் கூற்றுப்படி மனம் அடங்கும் இடத்தில் இருந்தவர்தான் இராமலிங்கர்.

மனதை அடக்கி ஆண்டதால்தான் இராமலிங்கர் "மனிதர்" ஆனார்.

அந்த மனிதர் புனிதர் ஆனதே ஞானம்.

மனித பிறவி எடுத்த நாம் முதலில் மனிதனாக வேண்டும். பின்னரே புனிதனாக முடியும்.

“அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது” என்கின்றனர் பெரியோர்.

பெறுதற்க்கரிய இம்மானிட பிறப்பை பெற்ற நாம் ஞானக் கல்வியை கற்றல் அதைவிட அரிது.

அதைவிட தானமும் தவமும் செய்தல் அரிதினும் அரிதாக ஆன்றோர் கூறுகின்றனர்.

அரிதான மானிட பிறவி பெற்ற இராமலிங்கர் மிகவும் அரிதான ஞானக் கல்வியை கற்றார் இறைவனிடமே! ஒருமையுடன் இறைவன் திருவடியை எண்ணி எண்ணி உணர்ந்தார். சதாகாலமும் நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து தவம் செய்யலானார்.

பலன் அவர் அறிவாற்றல் அண்ட அண்டங்களையும் கடந்து அப்பாலும் சென்றது! ஊன உடலே ஒளியுடல் ஆனது!

ஒப்பாரும் மிக்காரும் இன்றி பெரும் பேற்றினை பெற்றவரானார்.

1823 அக்டோபர் 5-ம் நாளில் பிறந்த இந்த மனிதன், 51 வயது வரை, பூதவுடலை ஒளியுடலாக்கி இப்பூவுலகில் வாழ்ந்தார்.

நம்மைப்போல இராமலிங்கரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சாதாரண மனிதனே! சதா சர்வ காலமும் இறைவனை எண்ணி மோன நிலைகூடி வாழ்ந்தார்.

மாயையான இவ்வுலகு தன் மனதிலே பற்றாமல், பற்றற்று வாழ்ந்தார்.

மனதை இறைவன் திருவடியிலே ஒருமைப்படுத்தியதால் அறிவு பிரகாசமானது! ஓதாதே உணர்ந்தார்.

“கற்றது நின்னிடத்தே” என இராமலிங்கர் கூறுகிறார். அதுவும் “சாகாக்கலை” எனும் பிறப்பறுக்கும் கல்வி!

ஒத்த இடத்தில் இருந்து தூங்காமல் தூங்கி மோன நிலையில் ஆன்ம பசியோடு இறைவன் திருவடியிலே

மட்டுமே மனதை இருத்தி விழி மலர்களை மலர்த்தி விழித்திருந்து தவம் செய்தார்.

பலன் மனிதனான இராமலிங்கர் புனிதர் ஆனார்.

தன்னுள் இருக்கும் “அது” தான் எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இறைவன் அம்சம் என்பதை உணர்ந்தார்.

தன்னைப் போலவே எல்லோர் உள்ளிலும் அதுதான் என்பதையும் உணர்ந்தார். அதுதான் அண்ட பகிரண்டம் எலாம் நிறைந்துள்ளது எனவும் கண்டார்.

தான் அதுவாகவே மாறி விட்டார்! தனக்கு கிடைத்த சத்து சித்தாக மிளிரக் கண்டார். அதனால் கிடைத்த ஆனந்தம் அளவிலாதது என உணர்ந்தார்.

அதை அறிந்ததால்தான் உணர்ந்ததால்தான் அதுவாக மாறியதால் அதன் இயல்பை பெற்றார் இராமலிங்க வள்ளலார்! ஆம்! இராமலிங்கர் வள்ளலாரானார்!

எவ்வுயிரும் தானாக கண்டார். பயிர் வாடிய வாட்டம் அவர் பெற்றார்.

அறியாமையில் உழல்கின்ற உயிர்களை கண்டு மனம் வெதும்பினார். தீச்செயல் புரியும் மனிதர்களைக்கண்டு உளம் பதை பதைத்தார். ஆணவத்தால் அடாது செயும் மனிதர்களைக் கண்டு பயந்தார். பிற உயிர் படும் துன்பம் அவர் பட்டார். அதுதான் ஒருமை.

ஆன்மநேய ஒருமை. வள்ளல் தன்மையை பெற்றவர் தன்மை இதுவே.

குறைந்தபட்சம் பசியையாவது நீக்குவதே மனித இயல்பு என்றார்.

உணவால் மனித உயிர் வாழும் பின் தேறிவிடும் என்றுரைத்தார்.

அதன்பின் வள்ளல் யார் எனும் ஆராய்ச்சியில் இறங்குவார் என்றார்.

வள்ளலாகிய இறைவன் யார்? யார்? என்று இறைஞ்சுபவன் ஏழைக்கு இரங்குவான். கருணையே உருவாவான்!

இந்த சிந்தனை வயப்படும் ஆரம்ப சாதகர்களுக்கு பசி இருக்கலாகாது எனக் கருதிய வள்ளலார் இராமலிங்கர் தர்மச்சாலை நிறுவினார்.

பசித்த யாராயினும் உணவிடுக என்றார் பசிப்பிணி மருத்துவர் வள்ளல் இராமலிங்கர்.

மனித உருகொண்ட நாம் மகாத்மா ஆக புனிதனாக தன் அனுபவங்களை நமக்கு எடுத்தியம்பினார். அதுவே "திருஅருட்பா". சுமார் 6000 பாடல்கள், உபதேசம் அடங்கியது.

இதுவரை இவ்வுலகில் தோன்றிய அத்தனை ஞானிகளும் உரைத்த உபதேசங்களை சுருக்கி, தெளிவாக நமக்குத் தந்ததுதான் "திருஅருட்பா".

ஒப்பற்ற சாத்திர நூலான திருமந்திரமும் ஒப்பற்ற தோத்திர நூலான திருவாசகத்தையும் ஒன்றாக்கி, ஈடு இணையற்ற ஒப்பற்ற சற்பாத்திரத்தை விளக்கும் நூலாக வள்ளல் இராமலிங்கர் நமக்கு அருளியதுதான்" திருஅருட்பா.

பிறப்பு இறப்பு எனும் சக்கரத்தில் சிக்குண்ட மனிதனை, "சக்கர நெறிநில்" என்ற ஞான வாக்குரைத்து மரணமிலா பெருவாழ்வு பெற வழி - விழி காட்டி உணர்த்துவார் வள்ளல் இராமலிங்கர்.

தன்னை அறிந்து இன்பமுற்ற வள்ளல் இராமலிங்கர் தன்னைப் போல் எல்லோரும் பெறவேண்டும் என இறைவனிடம் மன்றாடுகிறார்.

"என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே".

ஒரு மனிதன் தன்னிடமுள்ள துர்க்குணங்களை விட்டொழித்து வள்ளல் யார்? சாமி - யார்? என தெரிந்து கொண்ட தூய வழிகாட்டியை பின்பற்றுவானானால் அவன் தான் மனிதன் எனவும் பின்னர் புனிதர் எனவும்

வள்ளலாகவும் மிளிர்கிறான்.

“விழிக்குத்துணை மென்மலர் பாதங்கள்”

விழியிலே இருக்கும் மலரடி - திருவடி சுடரடிதான் நம் வழிக்கு துணை!

“சுட்டும் இரு விழிசுடர்தான் சூரியசந்திரன்”

நம் இரு விழிச் சுடர்தான் ஆரியன் சந்திரன் என்று ஞான வள்ளல்கள் பலர் கூறியிருக்கிறார்கள்.

“தன்னை அறியும் தலம்” “விழிச்சுடர்” தான்? தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்.

வள்ளலாகிய தலைவனை உணர்ந்தவர் வள்ளலாகிறார் கண்விழி புகுத்து கருத்தில் இருத்தினால் காணலாம் உணரலாம்! உய்யலாம்! வள்ளலார் உரைப்பது இதுவே! வாழலாம்! மரணமிலா பெருவாழ்வு பெறலாம்.

ஒரு மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என நம் முன்னோர் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

சூரிய உதயத்திற்கு முன் எழ வேண்டும். காலை கடன்களை முடித்து இறைவழிபாடு ஜெபம், தியானம் செய்ய வேண்டும். காலை 11 மணிக்குத்தான் ஆகாரம் உட்கொள்க. அதற்குமுன் நீர் ஆகாரம் மட்டுமே கொள்க. பிற்பகலில் சுத்த சைவ உணவு சாப்பிடுக. பின் சூரிய அஸ்தமனத்திற்கு முன் இரவு உணவு சிறிதளவு கொள்க. அந்தி மாலை பொழுதும் இறைவழிபாடு ஜெபம், தியானம் செய்க. உங்கள் அன்றாட கடமைகளை சரிவர செய்க. உண்மை சத்தியம் நேர்மை தூய்மை, நீதி உங்கள் வாழ்வில் ஒழுக்கம் கடைபிடிக்க. எல்லா வகையிலும் ஒரு மனிதன் மனிதனாக வாழ நல்ல வாழ்வியல் நெறிகளை நமக்கு வழங்கியுள்ளார்கள்.

நாம் இதை பின்பற்றி வாழ்வோமானால் நம் வாழ்வில் நிம்மதி உண்டாகும். நிம்மதி உண்டானவர் தம்மதியே

வேலை செய்யும்!

மதிவேலை செய்ய ஆரம்பித்தால் அவனே மற்றவர்களை மதிக்க கற்றுக் கொள்வான். எங்கே அமைதி - நிம்மதி உள்ளதோ அங்கே ஒளி துலங்கும்.

ஒளிபடைத்த கண்ணினாய் வாவாவா

உறுதி கொண்ட நெஞ்சினாய் வாவாவா

என பாரதியார் பாடினாரே!

நல்ல மனிதனாக வாழ்ந்தாரே

மகாகவி பாரதியார்!

நல்ல மனிதனாக வாழ்ந்தாரே மகாத்மா காந்தி!

நல்ல மனிதனாக வாழ்ந்தாரே திருவருட் பிரசாத வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்!

ஜாதி மத இன மற்றும் எந்த பேதமும் இல்லாதவனே மனிதன்!

பிறர் துன்பம் கண்டு துடிப்பவனே, இரக்கம் காட்டுபவனே மனிதன்!

எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி வாழ்பவரே மனிதர்!

புத்தன், இயேசு முகமது நபி இவர்கள் எல்லாம் நல்ல மனிதர்களுக்கு சிறந்த உதாரணம்! "வள்ளல் உன்னை பாடப்பாட வாய் மணக்குதே வஞ்சவினைகள் மனை விட்டு ஓடுதே" என இறைவனைப் பற்றி, வள்ளலைப் பற்றி நமது வள்ளல் இராமலிங்கர் பாடுகிறார்.

மனிதன் மனிதனாக இப்படித்தான் வாழவேண்டும் என வரையறுத்தது நம் முன்னோர்கள் தான்! மிக மிக ஆதி காலந்தொட்டே நம் இந்தியாவில் மனிதனாக புனிதனாக வாழ்ந்தவர்கள் ஏராளம் ஏராளம். ஆதியே மூலமே என்று

எல்லாம் வல்லவனை போற்றி பணிந்து உணர்ந்து வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் கணக்கிடலங்காது!

ஆதியிலே நோயுமில்லை சாவுமில்லை. பல்லாண்டு வாழ்ந்தவர்கள் பெரியதாழியிலே வைக்கப்பட்டு அவரவர் வாழ்ந்த வீடுகளிலேயே அடங்கினார்கள். சரித்திர ஆராய்ச்சியாளர்கள் முதுமக்கள் தாழி என கூறியிருப்பது இதுதான்!

நோயில்லாமல் வாழ்ந்தனர் மரணமிலாது உயிர் அடக்கம் பெற்றனர். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை நெறி அப்படி உன்னதமாக இருந்ததால் தான்!

இப்படி உலகுக்கே வாழும் நெறியை மனிதன் மனிதனாக வாழும் நெறியை கூறியது இன்றும் கூறி விருவது “இந்தியாவே”! இதுவ “சனாதனதர்மம்” என்றழைக்கப்படுகிறது.

சனாதன தர்ம நெறிப்படி வாழ்பவர் இங்கு அதிகம்! அதனால் தான் இங்கு இறையருள் பெற்ற அருளாளர்களும் அதிகம்! “எத்துனையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி ஒத்து ஒருமையுடையவர்” யாவர்? அவரே சனாதனதர்ம நெறிப்படி வாழ்பவர்! அவரே சன்மார்க்கி என வள்ளலார் கூறுகிறார். நாமும் வள்ளலாக வேண்டாமா?

நாமும் மனிதனாக வாழ நல்ல மனிதனாயிருந்து புனிதரான வள்ளலான இராமலிங்கர் வழி நடப்போம்!

அவர் கூற்றுப்படி வாழ்வோம்! அவர் காட்டிய சன்மார்க்க வழியில் செல்வோம் முதலில் மனிதனாவோம்!

வள்ளல் பெருமான் ஆறுமாத கைகுழந்தையாக இருக்கும்போது பெற்றோர் சிதம்பரம் நடராஜ தரிசனத்திற்காக எடுத்துச் சென்றபோது சிதம்பரரகசியத்தை கண்டு கலகலவென சிரித்தார். அதைப் பார்த்த குருக்கள் வருங்காலத்தில் பெரிய மகானாக வருவான் என வாழ்த்தினர்.

வள்ளல் பெருமாள் பள்ளிக்கூடம் போகவில்லை. தினமும் தன் வீட்டருகே உள்ள கந்தகோட்டம் முருகனை வழிபடுவதையே வழக்கமாக கொண்டார். வள்ளலாரின் அறிவுத்திறனை கண்டு முதலில் வியந்தவர் அவர் ஆசிரியர்தான்!

வள்ளலாரின் அண்ணன் சமயப்பிரச்சாரம் செய்பவர். ஒருமுறை அவர் உடல் நலமில்லாது போகவே தம்பியான வள்ளலார் உபந்நியாசம் செய்யச் சென்றார். ஒரு செய்யுளுக்கு ஒருநாள் இரவு முழுதும் உரையாற்றினார். வள்ளலார் உரை கேட்டவர்கள் மகுடிக்கு மயங்கிய அரவம் போலானார்கள். அண்ணன் வேண்டாம் தம்பியே இனி எப்போதும் பிரசங்கம் செய்ய வந்தால் போதும் என்றனர்.

அண்ணனே தம்பியின் பெருமையை இதிலிருந்து தான் உணர்ந்தார்.

# உ இரண்டின் மகத்துவம்

ஆத்மா - பரமாத்மா இந்த இரண்டின் மகத்துவம் தான் நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனிதர்களாகிய நாம் அனைவரும் ஆத்மாக்கள்.

ஓருயிரிலிருந்து பல லட்ச வகையான உயிரினங்கள் அனைத்தும் ஆத்மாக்களே!

இந்த ஆன்மாக்கள் அனைத்தும் எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த அணுவுக்கும் அணுவான பரமாத்மாவின் படைப்பே!

பரமாத்மாவே ஜீவாத்மாவின் உள் இருந்து, அனைத்துக்கும் மூல காரணமாக இருந்து இயக்குகிறது.

கடல் பரமாத்மா என்றால் அதில் உள்ள ஒரு துளி ஜீவாத்மா.

அப்படியானால் அந்த ஒரு துளி நீரும் கடல் நீர்தானே! அந்ததன்மை அதிலும் உள்ளதுதானே!

கடலை ஆராய்ச்சி செய்ய கடல்நீர் அனைத்துமா ஆராய்ச்சி கூடத்துக்கு கொண்டு வருவது! அது நடக்காத காரியமும் கூடத்தானே, கடலின் ஒரு துளி நீரை கொண்டு வந்து ஆராய்ச்சி செய்தால் போதுமானதல்லவா?

அதுபோலவே ஆத்மாவை ஆராய்ந்து அறிந்து உணர்ந்து கொண்டால், ஆத்மாவினுள் பரமாத்மா காரியப்படுவதை அறியலாம்! உணரலாம்!

கடல் ஆராய்ச்சி விஞ்ஞானம் ஆத்ம ஆராய்ச்சி மெஞ் ஞானம் கட-வுள் உள் கடந்து போனால் பார்க்கலாம்! கடவுளை. கடத்துள் போனால் பார்க்கலாம்!

கடல் போன்றபரமாத்மா எங்கிருக்கிறார்? கட-இல்

(கட-ல்) எங்கும் நிறைந்த அருள் கடலாகிய பரமாத்மா, கடம் ஆகிய நம் உடலிலும் உயிராக - ஆத்மாவினுள்ளும் கடந்து உள் கடந்து இருக்கிறான், இயங்குகின்றான். சதா சர்வ காலமும் இயங்கிக் கொண்டேயிருக்கிறான்!" ரமித்துக் கொண்டேயிருக்கிறான்" ஆடிக் கொண்டேயிருக்கிறான்.

அவன் ஆட்டம் கண்டு நாட்டம் கொண்டார். நம் வள்ளலார்.

அம்பலத்தில் - கோயிலில் - நாம் எல்லோரும் பார்க்கும் படியாக - வெளியிலே அம்பலமாகவே ஆடிக் கொண்டிருக்கிறான் இறைவன் எங்கோ கண்ணுக் கெட்டாத தொலைவிலில்லை. நம் எல்லோரும் அறிய எல்லோர் கண்களிலும் ஒளியாகவே ஆடிக் கொண்டிருக்கிறது. நம் உடலில் கண்ணில் - மணியில் - ஒளியாகவே உள்ளான் இறைவன்!

சிதம்பரத்தில் நடராஜர் ஆடிக் கொண்டு இருக்கிறார். அவர் ஆடுவதை நிறுத்தினால் இந்த உலகம் அழிந்து விடும் என இன்றும் ஊரில் பலர் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள்!?

சிதம்பரம் போனேன் அங்கே நடராஜர் ஆடவில்லை! சிலையாகத்தான் நிற்கிறார்! இந்த உலகம் அழியவில்லையே!

அப்படியானால் இதன் விளக்கம் யாது? சிதம்பரம் என்றால் சின்ன - அம்பலம் - அம்பரம் சின்ன - அம்பலம், சிற்றம்பலம், நடராஜன் நடமிடும் - ராஜன், - இறைவன் - பேரொளியின் அம்சம் சிற்றொளி - ஒளி ஆடிக்கொண்டு தானே இருக்கும்.

அதாவது எங்கும் நிறைந்த இறைவன் நம் உடலில் சின்ன அம்பலமாகிய எல்லோருக்கும் தெரியும்படியாக அம்பலமாக கண்ணில் ஒளியாக ஆடிக் கொண்டிருக்கிறான் என்பதாகும். நம் கண்ணில் ஒளி ஆடிக் கொண்டிருக்கிறது. நம் கண் எப்போது ஆடாமல் அசையாமல் நிலைகுத்தி நிற்கும்? இறந்தால்தானே! கண்ஒளி ஆடாமல் இருந்தால்

உயிர் பிரிந்து விட்டது என்றுதானே பொருள். கண் அசைவு ஆட்டம் இருந்தால் உயிர் இருக்கிறது என்று பொருள்.

இதைத்தான், நம் கண்ணில் ஆடிக்கொண்டிருக்கும் ஒளி நின்றால் நாம் இறந்து விடுவோம் என்பதைத்தான், சிதம்பரத்தில் நடமிரும் நடராஜர் ஆட்டம் நின்று விட்டால் உலகம் அழிந்து விடும் என பரிபாஷையாக மறைமுகமாக சொன்னார்கள் முன்னோர்கள்!

இப்படித்தான் எல்லா விதத்திலும் நம் ஆத்மா, பரமாத்மாவுடன் நம் உடலில் காரியப்படுவதை ஆன்றவிந்தடங்கிய ஆன்றோர் கூறியிருக்கிறார்கள்.

கணக்கிலடங்கா காவியங்கள் நம் நாட்டில் உள்ளது. அனைத்துமே சனாதனதர்மம் பற்றியதே - சன்மார்க்கம் பற்றியதே. நம் இந்தியா - இந்து நாடல்ல!? சனாதன தர்மம் போதித்த ஒப்பற்ற உயர்ந்த கலாச்சாரம் கொண்ட - மனிதன் மனிதனாக வாழும் நெறியை உலகுக்கு வழங்கிய நாடு!

இங்கு மதம் ஜாதி இனம் மொழி உட்பட எந்த பேதமும் கிடையாது!?

இந்திய கலாச்சாரத்திற்கு நிகரானது வேறு எதுவும் இல்லை.

உலக மக்களுக்கு உன்னத நிலையை தருவது இந்திய கலாச்சாரம் - சனாதனதர்மம் - சன்மார்க்கமே!

எல்லோரும் ஒன்று என்பதே நமது பண்பாடு. “ஒன்றேகுலம் ஒருவனே தேவன்”

என்பதே இந்திய கலாச்சாரம்.

“யாதும் ஊரே யாவரும் கேளீர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா”

இதுவே இந்திய கலாச்சாரம்

பரமாத்மாவாகிய இறைவன் எங்கும் நிறைந்த பேரொளி என்றும் அதுவே அருள் பொரும் ஜோதி என்றார் வள்ளலார். வேதங்களும் பைபிளும் குர்-ஆனும் ஒத்துக் கொண்ட உண்மை!

பரமாத்மா பேரொளியென்றால் சிவாத்மா சின்ன ஒளிதானே!

சின்னஒளி - ஒருஊசிமுனை அளவு ஒளிதான் நம் உயிராக நம் கண்ணில் துலங்குகிறது. இதுவே மாபெரும் இரகசியம். உண்மை. பார்வதி ஊசி முனையில் நின்று சிவனை குறித்து தவம் செய்தாள் என்கிறது புராணம்.

ஊசிமுனை அளவுள்ள நம்கண் மணியின் மத்தியில் நம் பார்வை (வதித்தல் - தங்குதல்) நிலைத்தால் ஒளியாகிய சிவம் உள்ளிருந்து வெளிப்பட்டு அருள்பாலிக்கும். இதுவே உட்பொருள்!

ஒரு சித்தர்பாடுகிறார், “ஊசிமுனை காட்டுக்குள் உலாவியே இருக்கலாம் பாரீர்” என்று.

ஊசிமுனை மிக மகி சிறிது. அது எப்படி காடாகும்? ஊசிமுனை அளவுள்ள ஒளி நம்கண்மணியின் மத்தியிலுள்ள ஊசிமுனை துவாரத்துள் உள்ளது! உள் புகுந்தால் அது விரிந்து பரந்த வெட்டவெளியாகும். அதைத்தான் சித்தர் பெருமகனார் பாடினார்.

சூட்சமமாக - பரிபாஷையாக - மறைபொருளாக - பரமாத்மா சீவாத்மாவாக நம் உடலில் கண்ணில் - மணியில் மத்தியில் ஊசிமுனை துவாரத்தின் உள்ளே காரியப்படுவதை சொன்னார்கள்.

கண்ணே - மணியே - ஒளியே என நம் வள்ளல் பெருமானும் பாடியுள்ளார்கள்.

மணியே - மணியின் ஒளியே என அபிராமி பட்டருர் பாடியுள்ளார்கள்.

மணியின் ஒளி, வலது கண்ஒளி சூரியஒளி என்றும்

இடதுகண் ஒளி சந்திர ஒளி என்றும் சித்தர் பலரும் கூறியிருக்கிறார்கள்.

“சுட்டும் இருவிழிசுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ” என மகாகவி பாரதி இரகசியத்தை போட்டுடைத்திருக்கிறார்.

“சூடுகொண்ட திருஆடு துறையை நோக்கில்

சூரியனும் சந்திரனும் தோற்றமாமே”

என அகஸ்தியர் துறைஅறிவிளக்கத்தில் ஞான இரகசியத்தை போட்டுடைத்து விட்டார்.

சுடக்கூடிய இரு விழி என்றால், சூடு - ஒளி - உஷ்ணம் இருக்குது அல்லவா? கண்தானம்மா சூரியன் சந்திரன்! திரு ஆகிய இறைவன் ஜோதி, ஆடுகின்ற - ஆடிக்கொண்டு இருக்கின்ற துறை என்றால் இடம். அதை நோக்கினால் சூரியன்ஒளி சந்திரன்ஒளியும் தோன்றும் என ஞானிகள் அறுதியிட்டு கூறியிருக்கிறார்கள்.

பரமாத்மா சீவாத்மாவாகி நம் கண்மணி ஒளியில் இரு நிலைகளாக உள்ளது!

இந்த இரண்டையும் ஒன்று சேர்ப்பதே தவம்.

“நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து”. இப்படி செய்ய வேண்டும் தவம் என்கிறார் வள்ளலார். கண்களை நினைத்து கண்மணியின் உள் ஒளியை நினைத்து உணர்ந்து உணர்ந்து அதிலேயே நினைவை நிறுத்தி நிறுத்தி பழக பழக நெகிழ்ச்சி உண்டாகும். நெகிழ்ச்சி அதிகரிக்க அதிகரிக்க அதுவே கருணையாக மலரும். கண்மணி ஒளியில் மனதை நிறுத்தும் போது கடுப்பு உண்டாகும் களம் பெருகும் கண்ணீர் தாரை தாரையாக கொட்டும். இப்படியே தொடர்ந்து தவம் செய்யச் செயய கண்மணி ஒளிபெருகும். கொஞ்சங் கொஞ்சமாக உடல் முழுவதும் பரவும் ஊன உடலை விரைவில் ஒளிவுடல் ஆகும்.

இதுவே உன்னதமான தவம். சிவனை சிவமாக்கும் ஒப்பற்ற கலை. இந்த கலையை உலக மக்கள் அனைவரும் பயில வேண்டும். பேரொளியாகிய - பரமாத்மாவாகிய இறைவனை சிற்றொளியாகிய - சீவான்மாவாகிய நாம் அடைய இது ஒன்றே வழி!

எல்லோருக்கும் பொதுவான - மனிதன் மனிதனாக வாழ்ந்து இறையோடு கலக்க வழி காட்டி கூட்டிச் செல்வதே சனாதனதர்மம். அதுதான் வள்ளல் பெருமான் உரைத்த சன்மார்க்கம்.

வள்ளல் பெருமான் இந்த உலக மக்கள் அனைவரையும் இரண்டு பிரிவாக பிரித்தார். ஒன்று அகவினத்தார். மற்றொன்று புறவினத்தார்.

அகவினத்தார் யார் என்றால் தன் அகத்தில் - உடலில் குடிகொண்ட இறைவனை அடைய முற்படுபவன்.

புறவினத்தார் யார் என்றால் புறத்தே வெளியிலே இறைவனை தேடி அலைபவர்கள்.

புறவினத்தாராக இருக்கும் ஒவ்வொருவரையும் அகவினத்தாராக மாற்றவே வள்ளல் பெருமாள் பெரும் பாடுபட்டார். ஞானத்தை இரகசியத்தை பரிபாஷையை போட்டுடைத்தார்.

எல்லோரும் வருக மரணமிலாபெருவாழ்வு பெருக என கூவி அழைத்தார். அதற்காக அவர்பட்டபாடு கொஞ்ச நஞ் சமா? அப்படி அவர் பட்ட துன்பங்களை கேட்டால் கல்லும் கரையுமே! வள்ளலார் ஏன் வருத்தப்பட வேண்டும்?

ஞானம் பெற்றாயிற்றே, போக வேண்டியதுதானே.

ஒருவன் ஞானம் பெற்றான் என்றால் அவன் இயல்பே அன்புதான்! கருணைதான்! நான் பட்ட கஷ்டம் யாரும் பெறக்கூடாது. எல்லோரும் வாருங்கள் மரணமிலா பெருவாழ்வு பெற நான் வழிகாட்டுகிறேன். துணையாயி ருக்கிறேன் என அறைகூவி அழைத்தார் மக்களை! புறாவுக்காக தன் சதையை அரிந்த சிபிசக்கரவர்த்தி!

பசுவுக்காக தன் மகனை தேரில் இட்ட மனுநீதி சோழன்! மயிலுக்காக தன் போர்வையை ஈன்ற பேகன்! முல்லை கொடிக்கு தன் தேரை கொடுத்த பாரி! இல்லை எனாது எல்லோமே கொடுத்த கர்ணன்! தம்பிக்காக தலைகொடுத்த குமணன்! இப்படி இன்னும் எத்தனையோ வள்ளல்கள் வாழ்ந்த புண்ணிய பூமி இந்தியா! சனாதனதர்மத்திற்கு சான்றுகள் இவை. ஆட்டுக்குட்டிக்காக தன்உயிரை தரதுணிந்த புத்தன்! வாடிய பயிரை கண்டு வாடிய வள்ளலார்! சனாதன தர்மத்தின் காவலர்கள். சன்மார்க்க நெறி வாழ்ந்தவர்கள் - இந்த ஞானபூமி இந்தியாவில் வாழ்ந்தவர்கள் இவர்கள். இவர்கள் வழி அன்புவழி! ஞானவழி! உலகம் உய்ய ஒரே வழி!

நமது இரு கண்களும் ஒப்பற்றவை! நம் உடலில் ஒரேமாதிரி உள்ள இரண்டு கருவில் உருவாகும் போது முதன் முதலில் உருவாவது கண்தான்! நாம் பிறந்தது முதல் இறப்பது வரை வளர்ச்சியடையாதது, முதிர்ச்சியடையாதது கண்கள் தான்! எலும்பு, நரம்பு இல்லாதது கண்தான்! இந்த உலகத்தில் உள்ள 700 கோடி மக்களுக்கும் ஒன்று போல் இருப்பது கண்கள்தான்! கண் - மணிதான்!! நம் உடலில் இருந்தாலும் நம் உடலில் ஒட்டாமல் இருப்பது கண்தான்! நம் வாழ்வே கண்ணில்தான் இருக்கிறது! நமது கண்களில் - மணியில் - மத்தியில் - ஊசிமுனை துவாரத்தின் உள்தான் ஊசிமுனை அளவு ஒளி உள்ளது! உலகமக்கள் அனைவருக்கும் ஒரே அளவாக இருப்பதும் கண்மணியே!

கண்தானம் யார் வேண்டுமானாலும் எந்தபாகுபாடுமின்றி யாருக்கும் கொடுக்கலாமல்லவா? ஏன்? எல்லோர் கண்ணும் ஒன்றாகவே இருப்பதால் தான்!? யாருக்கும் எந்த வித்தியாசமும் கண்ணில் இல்லை! உலகமக்கள் அனைவ ருக்கும் உள்ள ஒரே ஒற்றுமை இந்த கண்கள் தான்!?

நமது உடம்பின் முக்கியமான உறுப்பே கண்தான்!

"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்".

இந்த ஒரு திருக்குறளின் பொருள் தெரிந்தால் போதும், அவன் தான் ஞானி!?

ஒத்தது அறிந்தவன் உயிர் வாழ்வான் அறியாதவன் செத்துப் போவான். ஒத்தது எது? நம் உடலில் ஒரு கண்ணைப்போல உள்ள மற்றொரு கண்!?

ஒத்தது எது? உலகமக்கள் அனைவருக்கும் ஒன்றுபோல் உள்ள கண்கள்!?

ஏன் ஒன்று போல் உள்ளது? இறைவன் எல்லோர் கண்-மணி-ஊசிமுனை துவாரத்தின் உள்ளிலும் ஊசிமுனை அளவாக ஒரே அளவாக இருக்கிறான்!? இறைவனுக்கு பாகுபாடே இல்லை! எல்லாவரும் அவர் பிள்ளைகளே! எல்லோருக்கும் சமமான - ஒரே தன்மையில் தான் இறைவன் - பரமாத்மா - சீவனாக - ஒளியாக கண்களில் மிளிர்கிறான்!

இதுவே மாபெரும் இரகசியம்!!

தாய் தந்தை இருவர் இல்லாவிடில் நாம் ஏது? கண் கண்ட தெய்வம்!

இரு கண்கள் இல்லாவிடில் நமக்கு ஏது வாழ்க்கை? சுபோதிதான்!

இரு கண்களின் மகத்துவத்தை உணராதவன் மனிதனல்ல!? மிருகம்!

நம் கண்ணில் உள்ளே மறைந்திருக்கும். அவனை - சிவனை - ஒளியை உணராதவரை - நாம் கண்ணிருந்தும் குருடர்களே!?

கண் கண்ட தெய்வம் புறத்திலே நம் தாயும் தந்தையும் தான்!

நம் கண்ணிலே நாம் காணப்போவதுதான் தெய்வம். கண்ணிலே ஒளி உள்ளதல்லவா? அதைத்தானே காணப்போகிறோம். அதுதான் தெய்வம்.

நம் கண், கண்ட - ஒளியே, தெய்வம், கண்கண்ட தெய்வம் அகத்திலே ஒளியே!

சக்தி - சிவம் இரண்டும் சேர்ந்தது தான் உலகு.

ஒலி - ஒளி இரண்டும் சேர்ந்தது தான் உலகு.

சந்திரன் - சூரியன் இரண்டும் இருந்தால் தான் உலகு.

எட்டும் - இரண்டும் இருந்தால்தான் தெரிந்தால் தான் ஞானம்.

இந்த உலகத்துக்கே ஆதாரம் இவைகள் தான்.

எட்டாகிய அக்னி கலையை இரண்டாகிய சூரிய சந்திரகலைகள் அடைந்தால் தான் ஞானம்.

சூரிய சந்திரகலைகளாகிய ஒளி கலைகளை ஒளியை ஒன்றிணைத்தால் நாம் கேட்பது ஒலியை! இதுவே ஞானத்தின் முதல்படி.

தசவித நாதமும் கேட்டு ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்து முச்சுடரும் ஒன்றான நிலைகண்டு சத்தியாம்! வாலையை! கண்டு தொழுது அமுதம் உண்டு பின்தான் சிவத்தை காண முடியும்!!

இவ்வளவும் இரண்டாக உள்ள நம் உடம்பில் உட்புகு வாசலான கண்வழி போனால்தான் கிட்டும்!

முடிந்த முடிபான ஞானம் இதுவே. இதுவரை இவ்வுலகில் தோன்றிய அத்தனை ஞானிகளும் இப்படித்தான் ஞானம் பெற்றனர். மோட்சபிராப்தி அடைந்தனர்.

இரண்டின் மகத்துவத்தால் இருண்ட வாழ்விலிருந்து மீண்டு ஒளிபொருந்திய உடலும் பெற்று மரணத்தையும் வெல்லலாம்.

சத்தியமான வார்த்தை இதுவே!

ஞானிவள்ளலார் வரை எல்லாம் ஞானவான்களும் உரைத்த ஒரே உண்மை இதுவே!

வள்ளல் பெருமான் எப்போதும் திருவெற்றியூர் சென்று தியாகராஜ பெருமானை வணங்கி பாடிக்கொண்டேயிருப்பார். அழுது அழுது உணர்ச்சி பெருக்கால் பல சமயம் மயங்கியும் விழுந்தார். இறைவனை நெருங்க நெருங்க உலகியல் பற்று ஒரு சிறிதும் இல்லாதவரானார்.

வடிவுடையம்மனை பாடி மகிழ்ந்தார். கடற்கரை சென்று பட்டினத்தார். சமாதியில் அமர்ந்து தியானம் செய்வார்.

ஒருமுறை இரவு வீடுவர நேரமாகிவிட்டது. வீட்டுதிண்ணையிலேயே பசியால் படுத்தயர்ந்தார். சற்று நேரத்தில் அண்ணியார் வந்து உணவு கொடுக்க உண்டுபடுத்தார். சிறிது நேரம் கழித்து அண்ணியார் வந்து பார்த்து வள்ளலாரை உணவருந்த கூப்பிட, சற்றுமுன் தன் கையால் தனக்கு உணவழித்தது வடிவுடையம்மனே என

# மூன்று நிலையங்கள்

வடலூர் வள்ளல் பெருமான் உலக மக்கள் வாழ்வாங்கு வாழ மூன்று நிலையங்கள் தந்தார்கள்.

1) தர்மச்சாலை - 1967-ல் நிறுவினார்

2) சித்திவளாகம் - 1870-ல் நிறுவினார்

3) சத்திய ஞானசபை - 1872-ல் நிறுவினார்

முதலில் தர்மச்சாலையை கட்டி அன்பர்கள் தரும் காணிக்கைகளை கொண்டு தினமும் ஏராளமான அன்பர்களுக்கு உணவு கொடுத்தார்கள்.

தன்னை நாடிவரும் அன்பர்கள், இறைவனை நாடும் அன்பர்களுக்கு பசி எனும் கொடியநேய் அறவே இருக்கக்கூடாது என்பதற்காக கட்டியதே தர்மச்சாலை.

வள்ளல் பெருமான் கையால் ஏற்றிய அடுப்பு கடந்த 150 வருடங்களாக இன்றளவும் எரிந்து கொண்டு வருவோருக்கெல்லாம் அன்னம் அளித்துக் கொண்டு வருகிறது.

பசிப்பிணியை போக்க வந்த மருத்துவன் என்று எல்லோரும் போற்றினர் வள்ளலாரை!

பசிப்பிணி மருத்துவன் வள்ளல்பெருமான் சொன்ன உபதேசம் என்ன தெரியுமா?

“பசித்திரு” என்பதே! உடல்பசியை நீக்கிய வள்ளலார் ஒவ்வொருவரும் ஆன்ம பசியோடு இருக்க வேண்டும் என்றார். அறிவுப் பசியோடு இருக்க வேண்டும் என்றார். வள்ளல் யார்? வள்ளல் யார்? என்ற சத்விசார பசியோடு இருக்க வேண்டும் என்றார். வள்ளல் ஆகிய இறைவனோடு - ஒளியுடல் பெற்று ஐக்கியமாக வேண்டும். மரணமிலா

பெருவாழ்வு பெற வேண்டும் என்ற பசியோடு தாகத்தோடு இருக்க வேண்டும் என்றார்.

இரண்டாவதாக "சித்திவளாகம்" உருவானது. வள்ளல் யார் எனும் ஆராய்ச்சி செய்ய நம் பெருமாள் பல காலம் இருந்த இடமே சித்தி வளாகம். சனாதனதர்ம நெறி தழைத்தோங்க சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கம் கண்ட வள்ளல் பெருமான் சன்மார்க்க சங்கத்திற்கு கொடி அமைத்தார். அதன் விளக்கமும் ஞான அனுபவம் என்று உரைநடை பகுதியில் தெளிவாக குறிப்பிட்டு அன்பர்களுக்கு வழிகாட்டினார்.

இன்றும் தைப்பூச ஜோதிதரிசனம் கண்ட மூன்றாம் நாள் நம் பெருமான் திருக் காப்பிட்டுக் கொண்டு, ஒளியாகி கரைந்த வெளியிலே கலந்த, திரு அறை தரிசனம் காணலாம். சித்தி வளாகத்திலே சித்தியெலாம் பெற்றனன் என பெருமானார் குறிப்பிடுகிறார்.

சித்திவளாகத்தில் அன்பர்களை கூட்டி சன்மார்க்க சங்கம் நடத்திய நம் பெருமான் நமக்கு கொடுத்த உபதேசம் என்ன தெரியுமா? "தனித்திரு" என்பது தான்! சாதுக்கள் சங்கத்திலே இரு என்ற வள்ளலார் சன்மார்க்க சங்கத்திலே இரு என்ற வள்ளலார் தனித்திரு என்றே உபதேசித்தார்.

நான் ஆன்மா - சீவன் என்கிற தனி நிலையில் இருக்க வேண்டும். எப்போதுமே தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் என்ற அவா மிகுதியாகி சத்விசாரம் செய்து கொண்டே தனித்திருக்க வேண்டுமென்றார்.

தன்னை அறிய வெண்ணிலாவிடம் ஒரு தந்திரம் சொல் என்கிறார். நான் யார் என அறியும் ஆத்ம விசாரத்தில் இருக்கும் ஒருவனுக்கு வெண்ணிலாவாகிய சந்திரகலை பிரிந்து அக்னி கலையோடு போய் சேரும் உபாயத்தை சொல் என்கிறார். இது தனித்திருந்து சாதனை செய்தால் மட்டுமே சாத்தியமாகும். அதனால் தான் வள்ளல் பெருமான்

“தனித்திரு” என்றார்.

1874 - ஸ்ரீ முகவருடம் தை மாதம் புனர்பூச நட்சத்திரத்தன்று அன்பர்களை அழைத்து, தான் சித்திவளாகம் திருஅறையில் புகுந்து கொள்வோம். ஆண்டவர் எம்மை காட்டிக்கொண்டார் எனக்கூறி திருக்காப்பிட்டுக் கொள்ளுமுன் கூறிய உபதேசம் என்ன தெரியுமா?

ஒவ்வொரு மனிதனும் கருத்தில் கொள்ள வேண்டிய வேதவாக்கியம், ஞான இரகசியம், உத்தரவாதம்! வள்ளல் பெருமான் ஸ்தூல உடலோடு ஒளியோடு நமக்கு சொன்னது இதுவே.

“யாம் இப்போது இங்கிருக்கிறோம் இனி எல்லோர் உள்ளத்திலும் புகுந்து கொள்வோம்” பொறித்து வைக்க வேண்டிய உபதேசம் இதுவே! என்ன சொன்னார் வள்ளலார்?

சித்திவனாக திருமாளிகை உட்புகுமுன் கூறியது. இப்போது யான் இங்கு இருக்கிறேன். எல்லோர் முன்னிலையிலும் இருந்தார்கள் உண்மை! இனி எல்லோர் உள்ளத்திலும் புகுந்து கொள்வேன் இனி என்றால் திருக்காப்பிட்டுக் கொண்டபின் எல்லோர் உள்ளத்திலும் புகுந்து கொள்வேன் என்பது, யார் தூய உள்ளத்தோடு வள்ளல் பெருமான் உபதேசங்களை பின்பன்றி வாழ்கிறார்களோ? அவர்கள் உள்ளத்தில் புகுந்து வழிநடத்துவார்! ஆஹா எவ்வளவு பெரிய கருணைக் கடல் பெருமான்!

ஸ்தூல உடலை விட்டு ஒளியுடலோடு நம் கண்ணுக்கு புலப்படாது போனாலும் வேண்டும் அன்பர் உள்ளத்தில் ஒளியாகி வழிகாட்டுவேன் விழிகாட்டுவேன் மரணமிலா பெருவாழ்வு பெற உதவுவேன் என்றார்! யாருக்கு கிட்டும் இப்பெரும் பாக்கியம்!

அடியேனுக்கு கிட்டியது. 1980-ல் திருவடி தீட்சை தந்தார். அன்று முதல் சன்மார்க்க பணியாற்றி வந்த எமக்கு குருபீடம் கட்டி என் உள்ளத்தில் புகுந்தார்.

கண்மணிமாலை தொடங்கி 25 நூற்கள் ஞானநூற்கள் எழுதி வெளியிட தூண்டினார்.

எம்முள் இருந்து சுமார் 1000 அன்பர்களுக்கு திருவடி தீட்சையும் வழங்கினார்.

இப்போது நாடிவரும் அன்பர்களுக்கு நயனதீட்சை செய்வித்தருள்கிறார் எமது மூலமாக!

இந்நூல் எழுத தூண்டியதும் எழுதி வெளியிட வைத்ததும் வள்ளல் பெருமான் பேரருளே!

சித்திவளாகத்தில் சொன்னபடி எமது உள்ளத்தில் வள்ளல் பெருமான் குடிகொண்டுள்ளார்.

அடியேன் இப்பிறவியில் செய்த பெரும் செயல் குருவாக இருந்து வள்ளல் பெருமான் அருளால் வரும் அன்பர்களுக்கு ஞான உபதேசம் செய்வதுதான்! தனித்திருந்தால் மட்டுமே தவம் செய்தால் மட்டுமே கிட்டும்! வள்ளல் பெருமான் அருள்! சற்குரு அருள்!

மூன்றாவதாக வள்ளல் பெருமான் தானே முன்னின்று கட்டியது சத்திய ஞானசபை. ஞான உபதேசங்களை அருட்பாக்களால் கூறியருளிய வள்ளலார் பாமரர்களும் புரிந்து கொள்ளும். படியாக ஞான அனுபவம் எவ்வாறு இருக்கும் என்பதை விளக்கக் கட்டியதே ஞானசபை.

சத்திய ஞான சபையில் பிற கோவில்களில் உள்ளது போல தெய்வ திருவுருவங்கள் கிடையாது. பூசை வழிபாடு கிடையாது.

இறைவனை நாடி நாம் தவம் செய்யும் போது நமக்கு கிட்டும் முதல் பேறு, ஆத்மஜோதி தரிசனம் எல்லோரும் அறிய ஏற்படுத்தினார்.

சத்திய ஞான சபை நம் தலை அமைப்பை போன்றது. முன்புறம் உள்ளே இருபுறமும் சிற்சபை பொற்சபை உள்ளது. நடுவே உள்ளே - ஞானசபை உள்ளது. தைப்பூசம் அன்று

ஞானசபையில் ஒவ்வொன்றாக ஏழு வர்ண திரைகள் விலக்கப்பட்டு முடிவில் பெரும் ஜோதி காண்பிக்க ஏற்பாடு செய்தார்.

இதுவரை யாரும் கட்டாத கோயில்!? எனவே இதை கோயில் என்றழைக்காமல் சத்திய ஞானசபை என்றார் வள்ளலார்.

இதுவரை யாரும் செய்யாத புதுமையான வழிபாடு!? பிற கோயில்கள் போன்று தெய்வ திருவுருவங்களின்றி, ஒளி ஒன்றே பரமாத்ம நிலை என விளக்க ஞான சபை உள்ள ஒளியை ஏற்றி காண்பிக்கச் செய்தார். ஒளியை காண வேண்டுமானால் அதை மறைத்துக் கொண்டிருக்கும் ஏழு திரைகள் விலக வேண்டும். அது என்ன?

ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களால் நமது கர்மவினைகளுக்கு தகுந்தபடி திரைகள் போன்று ஆத்ம ஜோதி தெரியாதபடி மறைத்துக் கொண்டிருப்பதாகும்.

திரைகள் விலகினால் தான் ஜோதிதரிசனம். இதுதான் வள்ளல் பெருமானின் மிகப்பெரிய சாதனை?

இதுவரை வந்த ஞானிகள் பலர் உபதேசம் செய்துள்ளனர். ஞானிகள் பலர் கோவில் அமைத்தனர். இன்னும் பல ஞானிகள் ஞான உபதேசம் பரிபாஷையாகவே செய்துள்ளனர். வேதம் இதிகாசம் புராணம் இன்னும் எவ்வளவோ?! இவை அனைத்துக்கும் மேலாக அனுபவ ரீதியாக நம் முன் உருவாக்கி நிலை நிறுத்தியது தான் சத்திய ஞானசபை!

இறைவன் பேரொளி. அவனை காண உன்னிடமுள்ள அஞ்ஞான திரைகளை அகற்று என்பதே! எப்படி? புறத்திலே உள்ளதை புரிந்து கொள்வது?

“சிற்சபையும் பொற்சபையும் சொந்தமெனதாச்சு” சிற்சபை வலது கண் பொற்சபை இடதுகண் இருகண் மணியிலுள்ள ஒளியை பெருக்கினால் உள்ளே அக்னிகலையை ஞானசபையில் ஞானசபையில் ஆத்ம ஜோதியை மறைத்துக் கொண்டிருக்கும் நம் கர்ம பந்தத்தால் ஏற்பட்ட திரைகள்

அதாவது கண்மணியின் ஊசிமுனை துவாரத்தை மறைத்துக் கொண்டிருக்கிறது ஜவ்வு. இந்த ஜவ்வுதான் 7 நிலை திரைகளாகும்.நாம் தவம் செய்யச் செய்ய நினைந்து உணர்ந்து நெகிழ கண்ணீர் பெருகும் கண்ணில் கனல் எழும்பும் அக்கனல் ஞானக் கனல் உள்ளிருக்கும் ஜோதியை மறைத்துக் கொண்டிருக்கும் ஜவ்வை சூடாக்கி உருவாக்கிவிடும் கொஞ்சங்கொஞ்சமாக திரை போன்ற ஜவ்வு உருகி கரைந்து விடும். பின்னர் உள்ளே உள்ள ஜோதி தெரியும். இதை சொல்வதற்குத்தான் வள்ளல் பெருமான் சத்திய ஞானசபை கட்டி அங்கே ஜோதி தரிசனமும் காண வைத்தார்கள். ஜோதி தரிசனம் - ஞான அனுபவ நிலை.

இங்கே கண்ணை மூடிக் கொண்டிருந்தால் எப்படி ஜோதியை தரிசிக்க முடியும்?

இதற்குத்தான் பெருமான் ‘விழித்திரு’ என உபதேசம் செய்தார்.

“கலையுரைத்த கற்பனையை நிலை என கொண்டாடும் கண்மூடி பழக்கமெல்லாம் மண்மூடிப்போக” என வள்ளலார் கூறுகிறார்.

இமிச் செயலையே, கண்மூடித்தனம் என்கிறோம். கண்மூடி பழக்கம் என்பது அறியாமையால் செய்வது. இதுவல்லாமல் நாம் கண்ணை திறந்து பார்த்தால் தானே எல்லாம் தெரியும்! கண்ணை மூடிக் கொண்டால் ஒரே இருளாகத்தானே இருக்கும்.

சரியை கிரியை யோகம் அனைத்தும் கண்ணைமூடிக் கொண்டு செய்வது சொற்பலனே மிஞ்சும் முழுமை கிட்டாது.

ஞானத்தில் கண்ணை திறந்து கொண்டுதான் தவம் செய்ய வேண்டும். கண்ணைமூடினால் இருள் கண்ணை திறந்தால் ஒளி. நாம் ஒளியை பேரொளியை தானே தவம் செய்ய வேண்டும்.

கண் திறந்து காண்பதே உண்மை. கண்ணை மூடிக்காண்பது அனைத்தும் மாயை!

கண் திறக்க வேண்டும்! ஞான சாதனைக்கு. கண் இமைகளை திறக்க வேண்டும் என்பது ஒன்று. கண்மணியை மறைத்துக் கொண்டிருக்கும் திரையை அகற்ற வேண்டும், அடைப்பட்ட வாசல் திறக்க வேண்டும் என்பதும் ஆகும்.

கண்திறப்பது என்பது கண்மணியில் அடைத்து நிற்கும் வாசல் போன்ற திரைகள் நீங்க வேண்டும் என்பதே. அப்போதுதான் ஜோதி தரிசனம் ஆத்ம தரிசனம் கிட்டும். ஞானம் பெறலாம்.

தன் புறக்கண் இமைகளைவிட்டு அகக்கண் மணித்திரை திறப்பதே ஞானம். "திருக்கதவம் திறவாயோ திரைகளெல்லாம் நீக்கியே, - மணிக்கதவம் திறவாயே" என வள்ளல் பெருமான் பாடியுள்ளார்.

ஒரு ஓவியம் ஒரு சிற்பம் இவை செய்து முடித்தபின் முடிக்குமுன் கடைசியாக செய்வது கண் திறப்பது என்றேயாகும். கண் திறந்தால் பூர்த்தியாயிற்று என்று பொருள்.

அதுபோலவே ஒரு மனிதனுக்கும் அகக்கண் - மணித்திரை திறப்பதே பிறவியின் லட்சியம். பிறப்பில் மிக மிக முக்கியமான நிகழ்வு நாம் மனிதனாக பிறந்த பயன் பெற நம் கண் திறக்கப்பட வேண்டும். கண் திறந்தால்தான் ஜோதி தரிசனம், இறைவன் அருள் அடியேனுக்கு வள்ளல் பெருமான் அருள், குரு பீடமேறி, நயன தீட்சை மூலம் அகக்கண்களை திறந்து வைக்க அருள் பாலித்திருக்கிறது.

மாதா, பிதா, பெற்ற மனிதர் குருவை பெற்று தன் அகக்கண்களை திறந்து கொண்டு தவம் செய்து மேன்மையடைய வேண்டும். அதற்குத்தான் வள்ளல் பெருமான் படாத பாடுபட்டார், படுகிறார்.

உலக மக்கள் ஆன்மநேய ஒருமைப்பாடு கொண்டு தவம் செய்து மரணமிலா பெருவாழ்வு பெற வேண்டும்

என்பதற்காக எம்போன்றோரையும் இதுபோல் தீட்சை கொடுக்க பணித்திருக்கிறார் வள்ளல் பெருமான்.

தர்மச்சாலை கட்டிய வள்ளல் பெருமான் பசித்திருக்க சொன்னார்.

சித்திவளாகம் கண்ட வள்ளல் பெருமான் தனித்திருக்க சொன்னார்.

சத்திய ஞானசபை கட்டிய வள்ளல் பெருமான் விழித்திருக்க சொன்னார்.

"சத்திய ஞான சபையை என்னுள் கண்டனன் சன்மார்க்க சித்தியை நான்பெற்று கொண்டனன்."

தன்ஞான அனுபவத்தைத்தான் வள்ளலார் வெளியே நாமும் புரிந்துகொள்ள வேண்டி கட்டினார்.

நாம் அடைய வேண்டிய, அனுபவிக்க வேண்டிய நிலைகள் மூன்று.

சூரியகலை, சந்திரகலை, அக்னிகலை.

"முச்சுடரும் ஒன்றான ஜோதிபாதம் அச்சுதனும் காணா பாதம்" அந்தபாதம் ஜோதிபாதம் எது? நம் வலது கண்ணாகிய சூரிய கலையோடு இடது கண்ணாகிய சந்திரகலை சேர்ந்து உள்வழி உச்சிக்கு கீழே அண்ணாக்குக்குமேலே ஒன்று சேரும் இடமே அக்னிகலை. இம்மூன்றும் ஒன்றானபோது ஜோதி தரிசனம் கிட்டும். முப்பாழ், முச்சுடர் என்று ஞானிகள் கூறியது இதுவே.

மாதா, பிதா, குரு மூவருந்தான் நாம் இறைவனை அடைய காரணமானவர்கள். மாதா, பிதா உடலை தந்தார்கள். குரு உடலுக்குள் உறைபவனை தேட வழி தருவார்.

குருவில்லா வித்தை பாழ்

குருவனடி பணிந்து கூடுவதல்லார்க்கு

அருவாமாய் நிற்கும் சிவம்.

குருவை நாடி திருவடி அறிந்து உணர்ந்து இறைவனடி சேர வாரீர்.

குருவில்லா வித்தை பாழ்

"உங்கள் நடுக்கண்ணை தகுந்த ஆசாரியன் மூலம் திறக்கப் பெற்றுக் கொள்வது நலம்"

இது வள்ளல் பெருமான் உபதேசம். கண்ணில் நடுவில் இருக்கும் மறைப்பை நீக்கிவிட குருவை நாடுக. தீட்சை பெற வாருங்கள்.

வள்ளலார் வழி காட்டுவார்.

வடலூருக்கருகே வேட்ட வலம் ஜமீன்தாரின் ஒரு மனைவிக்கு பிரம்மரட்சஸ், ஒரு மனைவிக்கு மகோதரம் என மிகவும் வேதனையுற்றிருந்தார். நம் வள்லல் பெருமான். அவர் வீட்டு வாசலை மிதித்ததுமே முதல் மனையிவின் பிரம்மரட்சஸ் ஓடிவிட்டது. இரண்டாவது மனைவிக்கு வள்ளல் பிரான் விபூதி கொடுக்க அவரும் பூரண குணமானார்.

பின்னாளில் வடலூர் சத்திய ஞானசபைக்கு பெருமளவு நிலம் தானமாக வழங்கினார் வேட்ட வலம் ஜமான்தார். தன் ஜமீனில் இனி யாரும் உயிர்பலி செய்யக் கூடாது எனவும் உத்தரவிட்டார்.

பசியால் வாடிய மக்களை கண்ட நம் வள்ளல் பெருமான் தர்மச்சாலையை கட்டினார். பசி என வந்த எல்லோருக்கும் உணவளித்தார்.

ஒருமுறை எல்லோரும் சாப்பிட்டுப் போக 10 பேர் சாப்பிடவே உணவு மீதமிருந்தது. அச்சமயம் கும்பலாக

# நன்நாலும் கடந்தநிலை

ஞானிகள் மனிதன் மேம்பட நான்கு நிலைகளைக் கூறியருளினார்கள். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும்.

இந்நான்கு நிலைகளையும் நான்கு நான்கு நிலைகளாக பிரித்தனர். அவை சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்றும், கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் என்றும், யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் என்றும், ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்றும் மொத்தம் 16 நிலைகளாக வகுத்து வைத்தனர்.

ஒரு மனிதன், இரண்டின் மகத்துவத்தை உணர்ந்து மூன்று நிலைகளை அறிந்து தவம் செய்வானாயில் ஞானம் பெறுவான்.

இப்படி ஞானம் பெற, பக்தியோகமாகிய சரியை நிலை கடந்து, கர்மயோகமாகிய நிலை கடந்து, இராஜயோகமாய யோக நிலை கடந்து ஞானயோகாகிய ஞானம் கைகூட வேண்டும்.

ஒருமனிதன் பக்தியோகத்தில் சரியையிலும் ஞானம் பெறலாம். அவன் மீண்டும் பிறப்பான். கர்மயோகத்தில் கிரியையிலும் ஞானம் பெறலாம் அவனும் மீண்டும் பிறப்பான். ஞான யோகத்தில் ஞானநிலையில் பெறும் ஞானமே பிறவா நிலை தரும்.

மீண்டும் பிறவா நிலை பெற ஞானசாதனை புரிந்தால் மட்டுமே முடியும்!

சரியை - பக்தியோகத்தில் ஞானம் - சாலோகமுக்தி

கிரியை - கர்மயோகத்தில் ஞானம் - சாமீபமுக்தி

யோகம் - இராஜயோகத்தில் ஞானம் - சாரூபமுக்தி

ஞானம் - ஞானயோகத்தில் ஞானம் - சாயுச்சியமுக்தி

சரியையில் வாழ்வு முடிந்தவர் கிரியை செய்ய உடல் எடுப்பர். கிரியை முடித்தவர் யோகத்திற்கு உடல் எடுப்பர். ஞானம் முடித்தவர் ஞானத்தில் ஞானம் பெற்றவர் பிறவா நிலை பெறுவர். மரணத்தை வெல்வர். மிக மிக உயர்ந்தநிலை ஞானத்தில் ஞானமே! மரணமிலா பெருவாழ்வுபெற ஞானமே வழி!

நம் வள்ளல் பெருமான் நன்நாலும் கடந்த ஒளிர் ஞான சபாபதியை கண்டு ஆனந்தித்து ஒளியுடல் பெற்று மரணமிலா பெருவாழ்வு பெற்றார். அதை உலக மக்களுக்கு எடுத்தியம்புகிறார்.

இறைவனை உணர, அடைய எல்லோராலும் முடியும்! வாருங்கள் நான் உங்களுக்கு வழிகாட்டுகிறேன்! துணையாக இருக்கிறேன்! ஞானத்தில் சரியையாகிய 13வது படிக்கு உங்களை ஏற்றுவிக்கிறேன்! வம்மின் உலகீர் என அறைகூவி அழைக்கிறார். என்னே! வள்ளலாரின் கருணை!

இதுவரை வந்த அனைத்து மகான்களும் ஞானிகளும் வேதங்களும் படிப்படியாகத்தான் போனார்கள் உபதேசித் தார்கள். பரிபாஷையாகத்தான், மறைபொருளாகத்தான், சூட்சுமமாகவே தான் சொல்லிச் சென்றனர்.

ஆனால் நம் வள்ளல் பெருமான் எடுத்த உடனேயே மனிதனாக பிறந்த யாராயினும் ஞானத்தில் சரியை என்னும் 13வது படிக்கு அழைத்துச் செல்கிறார்! உபதேசிக்கிறார். விழி - வழிகாட்டி ஞானத்தை வாரி வாரி வழங்கியதால்தான் அன்பர்களால் ஞான வள்ளல் - திருஅருள்பிரகாச வள்ளலார் என போற்றி வணங்கப்பட்டார். இராமலிங்கர்!

இன்றைய காலத்தில் நடப்பதையும் ஒப்பிட்டுக் கூறலாம். எப்படியெனில் சிறிதுகால முன்பு வரை எல்லோருமே 1ம் வகுப்பு தொடங்கி படிப்படியாக படித்து கல்லூரி வரை படிக்க முடியும். ஆனால் இப்பொழுது அஞ்சல் வழி கல்விமுறை வந்துள்ளதல்லவா? 15 வயது ஆனால் 10ம் வகுப்பு எழுதலாம். திறமையிருந்தால் எந்த கல்லூரிக்கும் போகாமல் எத்தனை பட்டங்களும் பெறலாமல்லவா?

இன்றைய அரசாங்கம் கல்வியில் புரட்சி செய்துள்ளது.

அன்றைக்கு வள்ளலார் ஞானத்தில் புரட்சி செய்துள்ளார்.

மனிதனாக பிறந்தவர் அனைவரும் ஞானம் பெறலாம் வாருங்கள் எனக் கூறி எல்லோருக்கும் ஞானத்தில் முதல்படி ஞான சரியையை உபதேசித்து ஞானம் வாரி வாரி வழங்கினார். இது சாத்தியமா? சத்தியம்!? முடியும்!?

“வந்தால் பெறலாம் நல்ல வரமே!”

சமீபத்தில் பத்திரிகைகளில் படித்திருப்பீர்களே!? வட இந்தியாவில் ஒரு 9 வயது சிறுவன் B.A., M.A., பரீட்சை எழுதி பட்டம் பெற்றுள்ளான்.

பல துறைகளிலும் பலர் சிறுவர்கள் சாதனை செய்துள்ளார்களே?! எப்படி?! அவர்களும் நம் போன்ற மானிடர்கள் தானே! ஏன் நம்மால் அதுபோல் சாதிக்க முடியாது? முடியும்!. “முயற்சி திருவினையாக்கும்.”

நன்நாலு பதினாறு அதில் 13வது படிதான் வள்ளல் பெருமானின் ஞான உபதேசம்.

ஞான சரியை தான், நினைத்து உணர்ந்து நெகிழ்ந்து கண்ணீர் மல்கி தவம் செய்வது.

மனிதன் இறைவன். அருள் கொடையான தன் இரு கண்கள் மூலமாக தகுந்த குரு வழி தீட்சை பெற்று தவம் செய்தால் ஞான கிரியை ஞானயோகம் ஞானத்தில் ஞானம்

என படிப்படியாக முன்னேறுவான் இது சத்தியம்.

சாஸ்திர வேதம் எல்லாம் தடுமாற்றம் தரும்.

நேத்திர வழி சென்றால் உண்மை அறியலாம்.

படைத்தான் படைத்தான் உலகை படைத்தான்

படைத்த படைப்பெல்லாம் மனுவுக்கே

மனுவை படைத்தான் தன்னை வணங்க!

உலகை படைத்து அதையெல்லாம் மனிதன் வாழ படைத்தான். மனிதன் எப்போது வாழ்வான். தன்னை - தான் யார் என்பதை அறிந்து வணங்க தெரிந்து கொண்டால் அவன் வாழ்வான். மரணமிலாது வாழ்வான். மீண்டும் பிறவான். எவன் ஒருவன் தன்னை வணங்க கற்றுக் கொள்கிறானோ அவனே இரட்சிக்கப்படுவான். தான் யார்? தன்னுள் இருக்கும் ஆத்மா யார்? என்றும் தெரிந்து கொள்பவனே மனிதன். உணர்ந்தவனே புனிதன்.

“தன்னையறிய தனக்கொரு கேடில்லை”

தன்னை அறியும் தலம் எது?

தாயின் கருவில் முதன் முதல் உருவானதுதான் அது!

தந்தையும் தாயும் சேரும்போது உருவாகும் கருவில் உருவாவது முதலில் கண். அது இரண்டு கண்ணாகி அதிலுள்ல உஷ்ணத்தில் வெதுப்பி வெதுப்பி பிண்ட உற்பத்தியாகிறது.

அந்த கண்ணில் - கண்மணியில் உள்ள ஒளிதான் நாம் அறிய வேண்டிய, உணர வேண்டிய, பெருக்க வேண்டியதாகும்.

“கையறவிலாத நடுக்கண் புருவ பூட்டு கண்டு களிகொண்டு திறந்துண்டு நடுநாட்டு.”

வள்ளல் பெருமான் 13வது ஞானசரியை நிலையை

எவ்வளவு அழகாக தெளிவாக கூறுகிறார் பாருங்கள்! அருமை! அருமை! கையறவு - சந்தேகம். சந்தேகமின்றி ஐயந்திரிபர, நடுக்கண் - கண்ணின் நடுவில் உள்ள மணியில் அதுதான் புருவம் என்றும் அழைக்கப்படுகிறது. புருவமத்தி என்றால் கண் மத்தி, நடுக்கண் என்று பொருள்படும். இதுதான் ஞான இரகசியம். அந்த புருவத்தில் அதாவது நடுக்கண்ணில் ஒரு பூட்டு உள்ளது. அதை எப்படி திறப்பது? திறந்தால் அல்லவா உள்ளே சென்று சிவத்தை - ஒளியை தரிசிக்க முடியும்! பூட்டை திறப்பது எப்படி? “கண்டு - களிகொண்டு” நடுக்கண்ணை கண்டு - நினைந்து நினைந்து, களி கொண்டு மகிழ்வுடன் ஆனந்தமாக உணர்ந்து உணர்ந்து நெகிழ நெகிழ பூட்டு திறக்கும். அதாவது நடுவழியை ஊசிமுனை துவாரத்தை அடைத்து இருக்கும் திரையாகிய மெல்லிய ஜவ்வு விலகும். இதுவே சாதனை!

திறந்துண்டு நடு நாட்டு வாசல் திறந்தால் காட்சி கிடைக்கும். ஒளிக்காட்சி கிடைக்கும். அதிலேயே நிலை நிறுத்து என்பதே சாதனையின் இரண்டாம் நிலை.

நம் வள்ளல் பெருமான் இந்த இரண்டு வரிகளிலேயே முழு ஞானத்தையும் நமக்கு அருளியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு சன்மார்க்கியும் இதைத் தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

சாப்பாடு போட்டு கொண்டு வீணில் காலத்தை கழித்து விடாதீர். சாப்பாடு போடுவது புறவினத்தார் செயல். நீங்கள் அகவிதைத்தார் ஆக வேண்டும் எனில் மெய்ப்பொருள் உணருங்கள் திருவடியை அறியுங்கள். வள்ளல் பெருமான் காட்டிய ஞானசரியை வழிநின்று தவம் செய்யுங்கள்.

“தவம் செய்வார்க்கு அவம் ஒரு நாளுமில்லை”

தர்மச் சாலையிலேயே நின்றுவிடாதீர்! சித்தி வளாகம் எதற்கு? சத்திய ஞானசபை எதற்கு என சிந்தியுங்கள்.

அருட்பா பாடிவிட்டால் போதாது. பாடுபடவேண்டும்.

சொன்னால் போதாது வாழ்ந்து காட்ட வேண்டும்.

சாகாதவனே சன்மார்க்கி!

இது வள்ளலார் கூற்று.

சோறு போடுபவன் சன்மார்க்கி அல்ல! தயவு வர அன்பு வளர எல்லோரையும் நேசிக்க இது ஒரு வழி அவ்வளவுதான்!

சோறு போட்டே ஆயுளை கழித்து விடாதீர்கள்.

ஐயம் இட்டு உண் என்று சொன்னவரே

ஏற்பது இகழ்ச்சி என்று கூறினார்.

முரண்பாடாக அல்லவா உள்ளது.

"ஈயென்று நான் ஒருவரிடம் நின்று கேளாத இயல்பும் என்னிடம் ஒருவர் ஈதிடுக என்றபோது அவர்க்கு இல்லை என்று சொல்லாமல் இடுகின்ர திறமும் இறைவா தருக என வள்ளலாரும் கூறுகிறார். பிச்சை எடுக்கக்கூடாது. பிச்சை கொடுக்க வேண்டும். பிச்சை எடுப்பது இழிவான செயல் என்றால் அந்த இழிந்த நிலைக்கு நாம் ஒருவரை பிச்சை கொடுத்து ஆளாக்க வேண்டுமா? சற்று சிந்தியுங்கள். சிந்தித்தாலே தெளிவு பிறக்கும்.

எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணும் போது, நமக்கு சாப்பாடு உண்டு எனில் அது நம்முயிராகிய பிற உயிர்க்கும் தரலாமல்லவா? இதுதான் அன்னதானத்தின் சிறப்பு. ஆன்மாக்கள் அனைத்தையும் தன் ஆத்மாவாக பார்க்கும் நிலைதான் அன்னதானம் கொடுக்கும் போது ஏற்பட வேண்டும். அதற்குத்தான் வள்ளல் பெருமான் தர்மச்சாலையை ஏற்படுத்தினார்.

சாப்பாடு கொடுத்தாயிற்று போதுமா? உடல்பசி நீங்கியது போதுமா? சாப்பாடு போட்டவனும் சாப்பிட்டவனும் ஒன்றுதான் என எப்போது புரியும்?

அன்னதானம் என்பது ஒருவன் தனக்கு தானே சாப்பாடு

கொடுக்கிறான் என்று தான் பொருள்! கொடுப்பவனும் பெறுபவனும் ஒரே ஆத்மாதானே! இந்த மனோபாவம் வரவேண்டும். வளர வேண்டும், இதைத்தான் வள்ளல் பெருமான் வலியுறுத்தினார்.

நான் தினமும் அன்னதானம் செய்கிறேன் 100 பேருக்கு அன்னதானம் செய்கிறேன். பூசந்தோறும் சாப்பாடு கொடுக்கிறேன் என பெருமை பட்டுகொள்ள, பீற்றிக் கொள்வதற்கல்ல வள்ளல் பெருமான் சொன்னது!?

“பசித்தோர் முகம் பார்.”

“பசித்த யாராயினும் புசிக்க உணவு கொடு.”

இது மனிதன் எல்லோருக்கும் இருக்க வேண்டிய குணம். அன்னதானத்தை மகேஸ்வர பூஜை என்கிறார்கள் ஏன் தெரியுமா? பல்லாண்டுகளாக பலரிடமும் கேட்டேன் யாரும் பதில் சொல்ல வில்லை, தெரியவில்லை.

அன்னம் யாருக்கு கொடுத்தாலும் அதை முதலில் யார் ஏற்றுக் கொள்கிறார்? நாம் சாப்பிட்ட உணவு முதலில் வாய்வழியே தொண்டை வழியே தானே வயிற்றுக்கு போகிறது. நம் உடலில் உள்ள ஆதாரங்களில் தொண்டை பகுதி விசுத்தி ஆதாரத்தின் அதிதேவதை யார்? மகேசுவரன் தானே! நாம் உண்ணும் உணவு முதிலல் போவது தொண்தையில் விசுத்தியில் மகேசுவரனிடம் தான்! மகேசுவரன் தான் முதலில் ஏற்றுக் கொள்கிறான். எனவேதான் மகேஸ்வர பூஜை என்று சொன்னார்கள்.

அன்னதானம் என்றாலே அது மகேசுவர பூஜைதான்! தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பர். தவறு. தானத்தில் சிறந்தது ஞான தானமே! பயிற்று பசிக்கு தர்மச்சாலை நிறுவிய வள்ளலார் ஆத்ம பசிக்கு சித்திவளாகம் சத்திய ஞானசபை ஏற்படுத்தினார். தர்மச் சாலையில் அன்னதானம். சித்திவளாகத்தில் ஞானதானம்.

ஞான தானமே மிக மிக மிக சிறந்தது.

அன்னதானம் செய்யும் சன்மார்க்கிகளே ஞானதானம்

செய்பவனே சுத்த சன்மார்க்கி. விபூதி பூசாதவன் சுத்த சன்மார்க்கியல்ல. வள்ளலாரைபோல வேஷம் போட்டவன் சுத்த சன்மார்க்கியல்ல. அன்னதானம் செய்பவன் சுத்த சன்மார்க்கியல்ல. அருட்பா படிப்பவன் சுத்த சன்மார்க்கியல்ல.

வள்ளலாரை போல வேஷமிட்டு, விபூதி பூசாமல், அன்னதானம் செய்து அருட்பா படிப்பவன் சன்மார்க்கியேயல்ல!?

“சாகாதவனே சன்மார்க்கி.”

சாகாதிருக்க - மரணமிலா பெருவாழ்வு பெற சாகா கல்வி கற்பவனே சன்மார்க்கி! சாகா கல்வியை மற்றவருக்கு உபதேசிப்பவனே சுத்தசன்மார்க்கி.

வள்ளலார் வந்தது சோறு போடுவதற்கல்ல! மரணமிலா பெருவாழ்வை பறைசாற்றவே!! வள்ளலார், வந்தது, சன்மார்க்கம் போதித்து, உலக மக்கள் அனைவரையும் ஆன்மநேய ஒருமைப்பாடு உணர்வு கொண்டவர்களாக மாற்றி, மரணமிலா பெருவாழ்வு பெற வைக்கத்தான்! நன்றாக புரிந்து கொள்ளுங்கள்.

இறைவனை அடைய வழி காட்டியது நான்கு வேதம். அவற்றின் சுருதி வாக்கியம், ஏகம் தத் ஸத், அகம் பிரம்மாஸ்மி, தத்துவமஸி. எல்லாம் வல்ல இறைவன் ஒருவரே. அவர் உன்னுள் இருக்கிறார். நீதான் அது. அதுவே பேரொளியாகி உலகெங்கும் பிரபஞ்சமெங்கும் அணுவிற்கும் அணுவாக உள்ளது. உன் உயிராக ஆத்மாவாக இருப்பதும் அதுவே!

அது சின்ன ஒளியாக உன் கண் மணியின் மத்தியில் ஊசிமுனை துவாரத்தின் உள் உள்ளது. இதுவே மாபெரும் இரகசியம். எல்லோராலும் சொல்லப்பட்ட உண்மை.

மனிதன் - அந்த கரணம் நான்கின் நிலைப்பாட்டால் கர்மங்கள் ஆற்றி பிறப்பு இறப்பு நிலையடைகிறான். பிறந்து இறந்து காலங்காலமாக உழலும் மனிதனை இரட்சிக்கவே,

மனிதனாக பிறந்து பிறவா நிலை பெற்ற ஞானிகள் வழிகாட்டுகிறார்கள். அது அவர்கள் இரக்க சுபாவத்தை காட்டுகிறது. இப்படி மனிதனாக பிறந்து ஞானம் பெற்றவர்களும் கோடானுகோடி, அப்படி ஒருவர்தான் சமீபத்தில் தோன்றிய திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள். அவர் அருளிய அருட்பா முழுக்க ஞானம். நாமுய்ய நமக்காக அவர் அருளிய அருட்பாக்களே உபதேசங்களே "திரு அருட்பா".

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக ஆடினவர்க்கு வார்த்தை சொல்ல ஒரு சற்குரு வாய்க்கும் பராபரமே". பூசந்தோறும் வடலூர் சென்று அன்னதானம் செய்து அருட்பா படித்து விபூதி தரிக்காமல் வள்ளலார் போல் வேஷமிட்டு அலையும் அன்பர்களே ஒரு சற்குருவை நாடி சாகாக்கலை கற்று சன்மார்க்கி ஆக முயற்சி செய்யுங்கள். வள்ளல் பெருமான் துணை நிற்பார்.

தர்மரச் சாலையில் ஒருநாள் இரவில் பணியாளர் நம்பெருமானிடம் நாளைய உணவுக்கு ஒன்றுமேயில்லை எனக் கூறினார். பெருமான் இறைவன் அருள்வார் வரும் எனக் கூறி அனுப்பினார். மறுநாள் அதிகாலையிலேயே வண்டி வண்டியாக உணவு பொருட்கள் தர்மச் சாலைக்கு வந்தது. இன்று வரை 150 வருடங்களாக மக்கள் அன்போடு தரும் காணிக்கைகளை கொண்டு இருவேளையும் எல்லோருக்கும் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. வள்ளல் பெருமானால் ஏற்றப்பட்ட தீ தர்மச்சாலை அடுப்பிலே இன்றும் எரிந்து கொண்டேயிருக்கிறது.

வள்ளல் பெருமானால் கணக்கிலடங்கா மக்களின் கண்களிலே - திருவடியிலே தூண்டடப்பட்ட தீ கனன்று கொண்டு ஞானம் பெற்றுக் கொடுத்துள்ளது. இன்றும் அடியேன் மூலம் வள்ளல் பெருமான் தீட்சை தீயை அட்சத்தில் கொடுத்து வருகிறார். வள்ளல் பெருமையை வாயால் சொல்ல முடியாது! எழுத்தால் எழுத முடியாது. அவ்வளவு நீண்டு போவது.

# ரு ஐந்தும் ஒன்றானது

“ஐந்தில் ஒன்றுண்டென்றார் வெண்ணிலாவே”

வள்ளல் பெருமானின் அருள் பாடல் இது. திரு அருட்பா முழுவதும் பரவிக் கிடக்கும் ஞான குவியலில் இது ஒன்று.

திரு அருட்பாவுக்கு பலநூறுபேர் பலவிதமாக விளக்கம் கூறி வருகிறார்கள். அருட்பா பாடிய வள்ளலார் உரைத்தது அனைத்தும் ஞானமே! என்ற கருத்தை முன்னிருத்தி பொருள் காண்க. என எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

சன்மார்க்கிகள் பலர் பாடுவார்கள். ஆனால் ஒன்றிற்கும் பொருள் தெரியாதவர்களே!

“சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்வார் செல்வர் சிவ புரத்துள்” என திருவாசகம் கூறுகிறது.

பொருள் தெரியாது பாடுவதைவிட “சும்மா இருப்பதே” மேலல்லவா?

இன்னும் சில சன்மார்க்கிகள் தத்துவ விளக்கம் என்று நூற்றுக்கணக்கான பக்கங்கள் எழுதி தள்ளிவிட்டனர். யாருக்குமே புரியவில்லை.

இதற்குத்தான் வள்ளலார் அன்றே சொன்னார்.

“வேத சாஸ்திரங்கள் என்று வீண் வாதம் ஆடுகின்றீர் உண்மை வெளிதோன்ற உரைக்கவில்லை. என்ன பயனோ இவை” என்றார்.

தத்துவ விளக்கம் என்று சொல்லிக் கொண்டு தத்துபித்தென்று உளரிக் கொட்டியிருக்கிறார்கள். பற்பல மேடையிலும் பற்பல ஊர்களிலும் விணாக வாதங்கள் புரிகின்றனர். சம்பந்தமேயில்லாத ஆட்களை கூட்டி

வைத்து தற்பெருமையடித்துக் கொள்கிறார்கள். வள்ளலார் பேர் சொல்லி ஆடம்பர விழாக்கள் ஆர்ப்பாட்டமான செயல்பாடுகள் புரிகிறார்கள்.

எந்த ஒரு சன்மார்க்க சங்கமும் உருப்பட்டதாக தெரியவில்லை. சோறு போடுகிறார்கள் அருட்பா படிக்கிறார்கள். இன்னும் பலர் அனாதை இல்லம், முதியோர் இல்லம், பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள். பத்திரிகை நடத்துகிறார்கள். பரவாயில்லை. சமூக சேவை செய்வதை பாராட்டலாம். இதை செய்ய ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் இருக்கிறதே! இதைவிட மேலான ஒப்பற்ற சாகா கல்வியல்லவா வள்ளல் பெருமான் போதித்தார். அதையல்லவா உலகுக்கு சன்மார்க்க சங்கத்தவர் எடுத்துரைக்க வேண்டும்.

சோறு போடுவதும் கக்கூசுக்கு போவதுமாகத்தான் பலரின் வாழ்க்கை உள்ளது.

வள்ளலார் பெயர் சொல்லவே புண்ணியம் செய்திருக்க வேண்டும். உன்னதமான ஒப்புயர்வற்ற ஞானி வள்ளலார் உரைத்த சாகாக்கல்வி எல்லோரும் அறிய வேண்டாமா? இதைத்தான் சொல்ல வேண்டும் வள்ளலார் மேல் அன்பு கொண்டவன்.

சாகா கல்வியை கற்பிக்கும் கல்விச் சாலைகளாக சன்மார்க்க சங்கங்கள் மாற வேண்டும். மரணமிலா பெரு வாழ்வு பெற ஒவ்வொரு மனிதனுக்கும் வழிகாட்டுவதே சன்மார்க்க சங்கங்களின் முதல் வேலையாக இருக்க வேண்டும். இப்படிச் செய்பவர்கள் தான் சன்மார்க்கி! வள்ளல் பெருமான் அருள் இவர்களுக்குத்தான் பரிபூரணமாக கிட்டும். வெண்ணிலா என்றால் சந்திரன், ஆகாயத்து சந்திரனை பார்த்து பாடியதல்ல இது.

சந்திரனாகிய நம் இடது கண்ணாகிய சக்தியம்சம். உ ஆகிய இரண்டாம் இடம், நமது கண்ணில் “ஐந்தில் ஒன்று உண்டு என்றார். ஐந்து என்பது பஞ்சபூதங்கள். அதில் ஒன்று அக்னி. அதாவது நமது கண்ணில் நெருப்பு

உண்டு என்பதே ஆன்றோர் வாக்கு.

இந்த இடது கண் நெருப்பு சந்திரனின் அம்சம் 16 கலைகளை உடையது. இதுபோலவே வலது கண்ணிலும் உள்ல அக்னி சூரியனின் அம்சம் 12 கலைகளை உடையது.

வள்ளலார் எப்போதும் சூரிய கலையிலேயே நிற்க என்கிறார். ஏன்? உலகில் சூரியனிலிருந்து தானே சந்திரன் உட்பட எல்லா கிரகங்களும் ஒளி பெறுகிறது. அதே போலதான் நாம் நம் வலது கண்ணில் சூரிய கலையில் நினைவை நிறுத்தும்போது அங்கிருந்து கிளம்பும் ஒளிக் கதிர் சந்திரனுக்கு சென்று சேருகிறது. சந்திரனும் ஒளி பெறுகிறது - பெருகுகிறது.

ஞான சரியை - 13 வது படி - ஞானத்தின் முதல்படியில் வள்ளல் பெருமான் உரைத்தபடி குருவிடம் தீட்சை பெற்று வலது கண்ணில் நினைவை நிறுத்தும் போது சூரியகலை வெளிபட்டு சந்திரகலையுடன் சேரும்.

நாம் தியானம் - தவம் செய்யச் செய்ய இப்படியே சூரியனிலிருந்து ஒவ்வொரு கலையாக ஒளிக்கதிர்கள் சந்திரனின் ஒவ்வொரு கலையுடன் ஒளிக்கதிருடன் சேரும்.

சூரியனிலுள்ள 12 கலையும் சந்திரனிலுள்ள 12 கலையுடன் சேரும் இரு கண்களும் ஒளி மிகுந்து பிரகாசிக்கும். சந்திரனில் எஞ்சியுள்ள 4 கலைகள் உள் உள்ள அக்னி கலையுடன் போய் சேரும். அங்கு ஏற்கனவே 8 கலைதான் உண்டு இந்த 4 கலையும் சேரும்போது அக்னியில் 12 கலையாகும்.

“சக்தியாம் சந்திரனை செங்கதிரோன் ஊடுருவில்

முக்திக்கு மூலம் அது” ஔவைக்குறள்.

சூரியனில் 12 கலை சந்திரனில் 12 கலை சந்திரனின் 4 கலையை வாங்கி அக்னியும் 12 கலையாக மாறும். சூரியன் சந்திரன் அக்னி மூன்றும் 12 கலைகளுடன் ஒரே

தன்மையுடன் ஒளிரும். "முச்சுடரும் ஒன்றாய் முடிந்ததோர் ஜோதி பாதம்" இதுதான்! இதுவே முதல் சாதனை வெற்றி. "சிற்சபையும் பொற்சபையும் சொந்தமெனதாச்சு" வலது கண்ணும் இடது கண்ணும் ஒரே தன்மையானால் நம் வசமானால் ஞான சபையாகிய அக்னியில் ஆத்ம தரிசனம் ஜோதி தரிசனம் காணலாம். சிற்சபை இடதுகண், பொற்சபை வலதுகண். சத்திய ஞான சபையின் தத்துவம் இதுவேயாகும். "சத்திய ஞான சபையை என்னுள் கண்டனன்" என்றார். அல்லல்படும் ஐம்பூத ஒடுக்கம் எங்கே? என்று கேட்டு, சொல்பவரே உண்மை குரு என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்த உலகமே ஐம்பூதங்களாலானது. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பதே. ஒன்றுக்குள் ஒன்று என எல்லாவற்றிலும் எல்லாமும் உள்ளது. இந்த உலகில் நாம் காணும் அனைத்தும் பஞ்சபூத கூட்டுறவே. ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை. இப்படி ஒரு சிருஷ்டி தான் இறைவனின் லீலாவினோதம். படைப்பின் மகத்துவத்தை யாரறிவார்?

ஐந்து பூதங்களும் ஒடுங்கியிருக்கின்ற ஒரே இடம் நமது கண் தான்.

கண் சதை மண் அம்சம், கண்ணீர் விடுகிறோமல்லவா நீர் அம்சம். கண்ணீர் சூடாக சில சமயம் வருகிறதல்லவா? ஏன் உள்ளே நெருப்பு இருப்பதால்தான், நெருப்பு அணையாமல் இருக்க வேண்டுமானால், காற்று வேண்டுமல்லவா! நெருப்பு இருக்கிறதென்றால் காற்று இருக்கிறது என்றே பொருளாகும். ஆக நான்கு பூதங்கள் ஆயிற்று. கண்மணி எங்குள்ளது தெரியுமா? கருவிழியின் மத்தியில் கருவிழியை பற்றிக் கொண்டிருக்கவில்லை. நம் உடலை தொடவில்லை. கருவிழியில் உள்ளே பிராண நீரில் உருண்டையான கண்மணி மிதந்து கொண்டு இருக்கிறது. அதுவே ஆகாயம்.

ஆக 5 பூதங்களும் ஒன்றாயிருக்கிற ஒரே இடம் நமது கண்ணே! அவ்வளவு மகத்துவம் வாய்ந்தது நமது

கண்கள்.

பஞ்ச பூதத்தால் ஆன நமது உடலில் பஞ்ச பூதங்களும் ஒன்றாயிருக்கும் இடம் கண்.

நாம் தவம் செய்யும் போது கண்களை திறந்து இருந்து தான் தியானம் செய்ய வேண்டும். கண்ணை மூடிச் செய்வது தவமல்ல!

கண்ணை திறந்து தவம் செய்யும் போது ஏற்படும் அவத்தைகள் 5 ஆகும். அவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனப்படும்.

கண் மூடித்தனமாக செயல்படுவது அல்ல ஞானம். கண்ணை மூடிக் கொண்டு செயல்படுவதல்ல ஞானம். கண்ணை திறந்து வைத்து தியானம் செய்வதே ஞான நிலை.

கண்ணை மூடினால் இருள். கண்ணை திறந்தாலே ஒளி. அகக் கண்ணை திறந்தாலே பேரொளியை காணலாம்.

கண்ணே சரீரத்தின் விளக்காயிருக்கிறது எனக் கூறுகிறது பைபிள்.

சரிபாதிக்குமேல் ஈரமாகவுள்ள நம் உடலை, கண்ணில் உள்ள ஒளியால் சுண்டச் செய்வதே ஞான சாதனை. பேரொளியான தேவனை தரிசிக்க வேண்டுமானால் கண்ணில் உள்ள சிறிய ஒளியை தவத்தால் பெருக்கி சரிபாதிக்குமேல் ஈரமான உடலை ஒளியாக்கி வைப்பதே தியானத்தின் பலன். ஈரமற்றுப் போக வேண்டும். ஒளி பெருகணும். விழித்திருந்து கண்மணி ஒளியை தியானித்தால் உஷ்ணத்தால் ஈரம் உலர்ந்து ஒளியாகும். உச்சி முதல் உள்ளங்கால் வரை சுத்த உஷ்ணம் பரவி ஊன உடலே ஒளியுடலாகும்.

பஞ்ச புதங்களாலான உலகை, படைத்தல் தொழில் செய்து பிரம்மாவாக, காத்தல் தொழில் செய்து விஷ்ணுவாக, அழித்தல் தொழில் செய்து ருத்திரனாக மறைத்தல் தொழில் செய்து மகேசுவரனாக அருளல் தொழில் செய்து சதாசிவமாக இருந்து பரிபாலனம் செய்கிறார் இறைவன்.

பஞ்ச பூதங்களாலான இவ்வுலகை பஞ்சமூர்த்திகளாக இருந்து நடத்துகிறார். ஒன்றான அந்த பேரொளியே 5 ஆக பிரிந்து இக்காரியங்களை ஆற்றுகிறது.

"நாயோட்டும் மந்திரம் நமனை வெல்லும்" உலகில் எத்தனையோ மந்திரங்கள் உள்ளன. இந்த நாயை ஓட்டுகிற மந்திரம் எது தெரியுமா? சி-போ என்றுதானே சொல்வோம். சி என்றால் "நமசிவய" பஞ்சாட்சரத்தில் உள்ள சி அதாவது அக்னி எனப் பொருள் அக்னிகலையை அடைந்தால் எமனை வெல்லலாம், மரணம் கிடையாது என்பதே இதன் பொருள்.

இங்ஙனம் பரிபாஷையாக நம் முன்னோர்கள் சொல்லி வைத்தனர். நம் சிந்தனையை தூண்டினர்.

பஞ்சாட்சர மந்திரம் ஐம்பூதங்களை குறிப்பதாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் தன்மை, குணம் பற்றி மந்திரங்களுக்கெல்லாம் மேலான மகாமந்திரம் வள்ளல் பெருமான் நமக்கு தந்துள்ளார்.

"அருள் பெருஞ்ஜோதி அருள் பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"

தியானம் கண்ணை திறந்து செய்யுங்கள். மகா மந்திரத்தை வாய்விட்டு சொல்லுங்கள்.

மெய், கண், மூக்கு, செவி என்ற நம் பஞ்சேந்திரியங்களும் நம் உயிர் ஆற்றலினால் செயல்படுகிறது. உணர்தல் பேசுதல் பார்த்தல் நுகர்தல், கேட்டல் அனைத்தும் ஆத்மாவின் செயலால் - உயிர் ஆற்றலால் தான். ஐம்புலன்களும் ஆத்மஸ்தானத்தில் - உயிர் இருக்கும் இடம் - ஒளி துலங்குமிடத்தில் ஒடுங்கி விடுகிறது.

ஐம்புலன்களால் மனம் எண்ணி, புத்திக்கு அனுப்பி, சித்தத்தில் உறுதிபட்டு அகங்காரம் - செயல்படுகிறது. ஒவ்வொரு காரியமும் இப்படியே நடக்கிறது.

எச்செயலும் ஏதாவது கர்மத்தை - வினையை உண்டாக்கி விடும். வினைகள் தீர்க்கப்பட வேண்டும். இது

தீரத்தான் தியானம் தவம் தேவை.

வினை இருக்கும் வரை பிறப்புண்டு, வினை இல்லாமல் போனால் தான் பிறவி இல்லாது போகும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். "வினைபோகமே ஒரு தேகங் கண்டாய்!" அவரவர் வினைகளுக்கேற்ப பிறவி அமைகிறது. வினை முழுவதும் தீர வேண்டும். அதற்குத்தான் தவம். வினையறுக்க வந்ததே இப்பிறவி. இந்த வினை பிராரத்துவம், சஞ்சிதம், ஆகாமியம் என மூன்று வகைப்படும்.

பிறப்போடு வருவது பிராரத்துவம். விதிக்கப்பட்டு வந்து பிறக்கிறோம். நல்லோரை சார்ந்து ஒழுக்கமாக வாழ்ந்து சத்தியமாக நேர்மையாக வாழ்ந்தால் இறைவன் அருளால் சற்குரு கிடைக்கும். குருவே சரணம் என்றிருந்தால், இப்போது நாம் செய்யும் செயல்கள் அனைத்தையும் கண்ணியம் நம் கண்மணி ஒளியிடம் சமர்பித்துவிட வேண்டும். கண் அவன் - கணவன். ஆத்மாக்களுக்கு கணவன் பரமாத்மாதான். கண்ணன் நம் கண்மணியில் உள்ள ஒளி. அதிலேயே சரணடைந்து விட்டால் நமக்கு ஆகாமியம் இல்லை.

குருவை பெற்று, கண் திறக்கப் பெற்று, தவம் செய்யச் செய்ய இனி ஆகாமிய கர்மம் இல்லை! சாதனையில் இறங்கும் சாதகனின் பிராப்தம் குருவருளால் தீரும்! ஆகமியம் இல்லாது போய் - பிராப்தம் கரைஞ்சு போய் - சஞ்சிதமும் ஒவ்வொன்றாய் வெளிப்பட்டு தீரும். "தலைக்கு வரும் துன்பம் தலைப்பாகையோடு போகும்" குரு கூடவே இருந்து காப்பாற்றுவார்.

வினை தீரத்தீர இறைவனை நெருங்கி விடுவோம்.

பஞ்சமா பாதகம் செய்பவனாயினும் குருவால் உபதேசம் பெற்று சாதனை செய்தால் உத்தமனாகலாம்.

வால்மீகி மகிரிஷி, அருணகிரி நாதர் இன்னும் பலர் உதாரணத்திற்கு இருக்கிறார்கள்.

கண்ணன் திருவடியில் சரணானாலே நமக்கு வினையில்லை என்றாகும்.

“நான் செய்பவனல்ல சாட்சி மாத்திரமே”

என வாழ்ந்தால் வினைகளிடமிருந்து விடுதலை! பிறவிக் கடலில் நீந்தி கரையேறலாம்.

நம் கண்மணி ஒளியிலே நாட்டம் வைத்து எந்த காரியம் செய்தாலும் அதனின்று எந்த வினையும் நமக்கு வராது.

“எத்தொழிலை செய்தாலும் ஏதவஸ்தை பட்டாலும் முத்தர் மனம் மோனத்தே.”

மோனம் - மௌனம் - பேசாதது கண்.

கண்ணிலே மனம் தங்கினால் எந்த கர்மா செய்தாலும் நமக்கில்லை. கண்ணனுக்கே! அவன் தான் முத்தன். சித்தனாகிறான்.

“குருவில்லா வித்தை பாழ்” “தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது”

“குருவருளின்றி திரு அருள் கிட்டாது.”

நல்ல குருவை தேர்ந்து உபதேசம் தீட்சை பெற்று ஆன்ம பசியோடு பசித்திருந்து, தனித்திருந்தால் விழித்திருந்தால் மோட்ச பதவி கிட்டும்.

நாமுய்ய வள்ளல் பெருமான் நமக்கு அருளிய அருட்கொடைகள் 5 ஆகும். ஒன்று சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், இரண்டு தர்மச்சாலை, மூன்று சித்தி வளாகம், நான்கு சத்திய ஞான சபை, ஐந்து - திருவருட்பா!

வள்ளல் பெருமானை சற்குருவாக கொள்க.

“குருவின் அடிபணிந்து கூடுவதல்லார்க்கு அருவமாய் நிற்கும் சிவம்”

வள்ளலார் வாய்மொழிப்படி வாழ்ந்தால், சற்குரு கூடவேயிருந்து உதவி, மரணமிலா பெருவாழ்வும் பெற்றுத் தருவார். இது சத்தியம். குருவே சரணம்! குருவே சரணம்! குருவே சரணம்!

வள்ளல் பெருமான் அழியாத உடம்பை பெற்றார். பஞ்சபூதங்களால் அழிக்க முடியாத உடல் பெற்றார். எந்த கொலை கருவியாலும் அழிக்க முடியாத உடல் பெற்றார். இறைவன் கொடுத்தருளினார்.! அந்தளவுக்கு அவரின் தவம் இருந்தது. தனக்கு இறைவன் அழியாத உடலை, ஒளியுடலை தந்தருளினான் என்று வள்ளலாரே கூறியிருக்கிறார்.

தனக்கு கிடைத்தது போல் உலகில் எல்லோரும் பெறலாம் வாருங்கள் என கூவி அழைக்கிறார்.

மேலும் இறைவனிடம் வள்ளலார் வேண்டுவது என்ன தெரியுமா? இரைவா எனக்கு கிடைத்தது போல அழியாத உடம்பும் மரணமிலா பெருவாழ்வும் இந்த உலக மக்கள் எல்லோரும் பெற அருள்புரிக என மன்றாடுகிறார்!

நாமும் இறைவனருளை இலகுவாக பெற, ஞான

# ஆறு ஆறுக்கு அப்பால்

அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரம்பொருள் இருக்குமிடம் நம் உடலில் ஆறாறுக்கப்பால்! நமது கண்கள் ஒவ்வொன்றும் மூன்று வட்டங்கள் இருகண்கள் ஆறுவட்டம்.

இரு கண்களாகிய ஆறுவட்டம் தாண்டி உள்ளே போனால் நெருப்பாறு, மயிர்ப்பாலம், வெண்சாரை உண்டு.

ஆறு வட்டம் தாண்டி ஆறுபோல் ஓடி ஒளி உள்ளே போகும். பரிபாஷையாக சொன்ன மெய்யனுபவம் இது!

ஆறாறு முப்பத்தாறு. மயிர் பாலம் ஏறி நெருப்பாறு தாண்டி போகும் போது வெண் சாரை வந்து மறிக்கும். அதை உண்டு முன்னோக்கி போனால் இறைவனை காணலாம்.

இந்த நிலை பெற்றவன் ஆறாறு முப்பத்தாறு தத்துவம் வென்றவனாகிறான். ஆத்ம ஜோதி தரிசனம் கண்டவன் இறப்பதில்லை. மரணமிலா பெருவாழ்வு பெறுவான். வள்ளலார் துணையாக வந்து நம்மை கரை சேர்ப்பார்.

வள்ளல் பெருமான் தன்வீட்டில் சிறுவயதிலே கண்ணாடியில் ஆறுமுக கடவுளை கண்டாரல்லவா?

எப்படி? கண் - ஆடியில் இருமூன்று ஆறு. முகத்துக்கு முகமான ஆறு வட்டத்தை ஆறுமுகமாக ஒளிவிட்டு ஜொலிக்கும் அழகை கண்டார். பன்னிரு கரம் - சூரிய கலை 12 ஆகும். மயில் மீது - பல வண்ண ஒளிகளோடு பார்த்தார். சேவல் கொடி - தசவித நாதம் கேட்டார். மயிலே பலவர்ண ஒளியாகவும் சேவலை நாதமாகவும் கூறப்படுகிறது.

வள்ளல் பெருமான் கண் திறந்து தவமியற்றும் போது

தன் கண்ணையே கண்மணி ஒளியை நாதத்தொனியுடன் கேட்டு பார்த்து பரவசமானார்.

ஜோதி ஏற்றி கண்ணை நாடி தியானம் செய்யும்போது பலவர்ண ஒளிகளை தன் கண்களிலேயே கண்டார். அப்போது நாதமும் கேட்டது! தன் கண்களையே தன் முன்னால் கண்டார். இது ஞான அனுபவம். சிறுவன் வள்ளலாருக்கு அப்போதே சித்தித்தது - தித்தித்தது. திரு அருட்பா ஆறு திருமுறைகளாக தொகுக்கப்பட்டது. “நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் தன் வார்த்தையன்றோ” என்றே வள்ளல் பெருமான் கூறுகிறார்.

எப்படி? சிறுவனாயிருக்கும்போதே, தன் கண்ணிலே ஆடிக்கொண்டிருக்கும் ஒளியை, திருவடியை கண்டார். தன்னுள் இறைவனை ஜோதியை - பரமாத்மாவை உணர்ந்தார். தன்னுள்ளிருந்து இறைவன் தான் எல்லாம் நடத்துகிறார் என்று நமக்கு சொன்னார்.

“பாட்டுவித்தால் பாடுகின்றேன்; ஆட்டுவித்தால் ஆடுகின்றேன்; ஊட்டுவித்தால் உண்கின்றேன்” எனப்பாடி தன்னுள்ளிருந்து இறைவன் காரியப்படுவதை எடுத்துரைத்தார்.

ஒரு ஞானப்பாடலில் “ஆறுமுகமான பொருள்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. “பொருள்” என்பது மெய்ப்பொருளாகும். மெய்ப்பொருள் என்பது திருவடி என்றும் கண்கள் என்றும் சொல்லப்படும். ஆறுமுகமான கண்கள். 1 கண், 3 வட்டம், 2 கண், 6 வட்டம். இரு கண்களை கண்ட காட்சிதான் ஆறுமுகம் என்றனர். வள்ளல் பெருமானின் முதல் ஞான அனுபவம் இது!. கண்ணாடியின் விளக்கேற்றி வைத்து அதன் முன் அமர்ந்து கண்ணை திறந்து பார்த்தபடியே தான் சும்மா இருந்தார். கண்ணாடியில் முழு உருவமும் முதலில் தெரியும். புகை மூட்டம் போல் நம் உடல் காணப்படும். பின்னர் மறைந்தும் விடும். கண்கள் மட்டும் தெரியும். அபபோது பல வண்ணங்களில் ஒளியும், தசவித நாதமும் கேட்கும் தியானம் செய்யச் செய்ய படிப்படியாக இவ்வனுபவம் கைக் கூடும்.

இவ்வனுபவமே “சீர் கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்” என வள்ளலார் பாடினார். தெய்வம் இருக்கும் உடல் இறைவன் நமக்கு கொடுத்த சீர் - சீவன். சீர் உள்ள இடம் ஆறு என இருகண்களையே கண்டார் வள்ளலார்.

நம் உடலில் உள்ள ஆறு ஆதாரங்கள் பற்றித்தான் யோக சாஸ்திரங்கள் கூறுகின்றன. “மூலமுதல் ஆறுதலம் கீழே தள்ளி முதிர்ந்து நின்ற மேலாதாரம் காணு காணு” என சித்தர் பெருமக்கள் கூறியுள்ளனர்.

ஞான அனுபவ நிலைகள் நம் உடலில் தலைப்பகுதி மட்டுமே! கழுத்துக்கு கீழேயிருப்பது எல்லாம் கர்மாவை செய்பவனயாகும். தலைப்பகுதியிலுள்ள பஞ்சேந்திரியங்களும் கர்மேந்திரியங்கள் தான். தவ நிலையில் கர்மேந்திரியங்களான மெய், வாய், கண், மூக்கு, செவி எல்லாம் ஞானேந்திரியமாக மாறிவிடுகிறது.

ஐம்புலன்களும் புறத்தே செயல்படுகின்றது. ஞானசாதகன் தவம் செய்வது புறத்தே அலைவதை நிறுத்தி அகத்தே திருப்புவதுதான். இவை அனைத்தும் மனதின் கட்டுப்பாட்டில் உள்ளது. மனம் செம்மையானால் வாயால் மந்திரம் சொல்ல தேவையில்லை. மூக்கால் காற்றை இழுக்க தேவையில்லை. உடலால் எந்த பணியும் செய்யத் தேவையில்லை. ஐம்புலன்களை வைத்து புறத்தே செய்யும் எச்செயலும் ஞான நிலையல்ல!

ஐம்புலன்களும் ஐம்பூதங்களும் ஒன்று சேரும் இடத்தில் இவற்றை ஆட்டிப்படைக்கும் மனதை இருத்தினால் போதும்.

“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்” ஐம்பொறிகளின் வாயில் - வாசலில் - கண்ணில் ஐண்புலன்களை - ஐம்பூதங்களை சுட்டு எரித்தவன் அவித்தவன் - உஷ்ணத்தால் நீற்றுபவன், சத்தியமாக வாழ்பவன் நீடுவாழ்வான் - சாகமாட்டான்.

நம் கண்களில் உள்ள ஒளியை பெருக்கப் பெருக்க

ஒளி ஓங்கி எல்லா மலங்களும் கொஞ்சங் கொஞ்சமாக சுட்டு எரிக்கப்பட்டுவிடும். புறச் செயல் அற்றுப்போக போக உள்முகமாக ஒளி அலைகள் பாயும். உள்ளே அக்னி கலையை அடையும். இதுதான் சாதனை.

“சுட்ட சுடுகாடும் வெளியும் அதுவேயாகும்” என ஒரு சித்தர் கூறுகிறார். நம்மும்மலங்கள் சுட்டு எரிக்கப்படும் சுடுகாடு நம் கண்கள். அங்குதானே நெருப்பு உள்ளது. உள்ளே போனால் பெருவெளி - வெட்டவெளிதான். இதைத்தான் இன்னொரு சித்தர் ஊசிமுனை காடு என்றார். ஊசிமுனைக்குள் சென்றால் பெருங்காடுதான். காட்டில்தானே காட்டாறு சாரைப்பாம்பு காட்டானை எல்லாம் இருக்கும்!? இவையனைத்தும் பரிபாஷையாக சொல்லப்பட்டதே. ஆறுக்குள்ளே சென்றால் நெருப்பாறுதான்! மூலாதாரம் கீழே என்பர் அறிவிலிகள்.

“மூலமுதல் ஆதாரம் ஆறினையும் கீழே தள்ளி முதிர்ந்து நின்ற மேல் ஆறுதலத்தை பாரு பாரு”! ஆறுதலமாக ஆறுமுகமாக உள்ளது இரு கண்கள். கணணே எல்லா ஆதாரத்திற்கும் மூலம். எல்லாவற்றுக்கும் மூலமான கண்ணே அதில் உள்ள ஊசிமுனை துவாரத்தின் உள் ஒளியே நம் ஜீவ ஒளி!

விநாயகர் அகவலில், மூலாதரத்தில் மூண்டெழு கனலை காலால் எழுப்பும் கருத்தரிவித்து என்று அழகாக பாடியுள்ளார் ஔவையார்! மூல ஆதாரம் கண், அதில் தவம் செய்வதால் எழும் கனல் பெருஞ்ஜோதியாக எழும். காலால் எழுப்பும் கருத்து அறிவித்து - கால் என்றல் பாதம் - இறைவனின் திருவடி. கண்ணாகிய மெய்ப்பொருளில் கருத்து வைத்தால் கனல் மூண்டெழும். எவ்வளவு அழகாக சொல்லப்பட்டது பாருங்கள்! கண்ணே - இறைவனின் கால் திருவடி!

“மூலமாம் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை” என சிவாக்கியர் பாடுகிறார். மூலம் ஆகிய குளம் நம் கண் நீர் நிறைந்துள்ளதால் குளம் என்றார். நம் கண்ணே மூலம் என்பது தெளிவாகிறதல்லவா? இதில் முளைக்கும்

கோரைபுல் என்னவென்றால் அந்தகரணங்களால் தினம் தினம் ஏற்படும் இருவினையாகிய கோரையை அறுத்தெரிய வேண்டும் என்றார். இதில் இன்னொரு இரகசியமும் வெளிப்பட்டது. கண்ணால் பார்ப்பதால் தான் மனம் புத்தி சித்தம் அகங்காரத்தால் வினைகளாகிய கோரை முளை விடுகிறு. அதை தினமும் அறுத்துத் தள்ளுவதே தியானம்.

வினைகளுக்கு காரணம் கண்ணால் பார்ப்பதே! வினை வரக்கூடிய ஒரு அம்சம் நம் கண்ணில் உள்ளது! அது என்ன? வெள்ளை விழி அடுத்து கருவிழி அடுத்து கண்மணி. கண்மணியின் மத்தியில் ஊசிமுனை துவாரத்தை மறைத்துக் கொண்டிருக்கும் மெல்லிய ஜவ்வு.

இந்த ஜவ்வு தான் நாம் பார்க்கும் அனைத்துக்கும் காரணம்! அதுதான் முன்வினையின் இருப்பிடம். அதற்குத்தக்கபடித்தான் இப்போது மனம் செயல்பட்டு மேலும் புதுப்புது வினை உண்டாகும். இப்படியே போனால் இதற்கு முடிவு?

வள்ளல் பெருமான் உரைத்த ஞான சரியை வழி தியானம் தான். கண்மணியை நினைந்து நினைந்து கண்ணீரால் உடம்பு நனைந்து நனைந்து இருக்கும்போது கனல் எழும்பும்! மனம் அங்கே நிற்பதால் புறச் செயல் நடைபெறாது புதுவினை உருவாகாது. மனம் கண்மணியில் நிற்க நிற்க கனல் ஓங்கி வளரும். ஞானக்கனல் பெருகினால் முன் உள்ள ஜவ்வு கொஞ்சங்கொஞ்சமாக உருகி கரைந்துவிடும். ஊசிமுனைவாசலை அடைத்துக் கொண்டிருந்த ஜவ்வு கிழிந்தவுடன் கண் திறக்கும் என்று ஞானிகள் கூறியிருக்கின்றனர். இதுவே சாதனை! இதுதான் நாம் செய்ய வேண்டிய தவம்.

இப்படியே பலகாலும் முயன்று வரவர வினைகளும் சுட்டு எரிக்கப்படும். ஜவ்வுதான் நாம் செய்தவினை வடிவம்.

சிவபெருமான் முப்புரம் எரித்தார் என்று சொன்னது இந்த சாதனையைத்தான்.

ஆணவம் கன்மம் மாயையாகிய மும்மலங்களே முப்புரம். சிவம் புன்னகையால் வென்றார என்பது ஜவ்வால் மூடிய ஊசி முனை துவாரம் உள்ளிருக்கும் சிவமாகிய ஒளிபெருக அந்த அனலில் ஜவ்வு லேசாக விலகும். இதையே புன்னகை என்றார். அதாவது வாய் லேசாக திறந்தது என்று பொருள். வாய் கண்மணி துவாரம். லேசாக திறந்தாலே புன்னகையாலே நம்முள் மலமும் எரிந்து போயிற்றாம். அப்படியானால் நன்றாக சிரித்தால் வந்த வினையும் வருகின்ற வல்வினையும் எரிந்து சாம்பலாகிவிடுமல்லவா? திருமந்திரம் கூறும் உண்மை ஞானம் இது!

பிறவியிலேயே கண் இல்லாதவர்கள் நிலை என்ன? குருடர்கள் - கண் பார்வை அற்றவர்கள் ஒளி கண்ணில் இல்லாததால் தானே, அந்த ஒளியை பெருக்கி அதன் முன் உள்ள வினை திரையை கிழித்து ஆத்ம ஜோதியை தரிசனம் செய்ய இயலும்! கண் பெற்ற நாம் பாக்கிய சாலிகள்.

நமக்கு கண் - ஒளி இருப்பதால் தவம் செய்து அக்னி கலையோடு சேர்ந்து ஆத்ம ஜோதி தரிசனம் செய்ய முடியும். பிறவிக் குருடர்கள் நேராக அக்னி கலையைத்தான் பிடிக்க வேண்டும். அது அவ்வளவு சாத்தியமில்லை! மிக மிகக் கடினம். புண்ணியம் இருந்து விடாமுயற்சியுமிருந்தால் தவம் செய்தால் குருடர்களும் ஞானம் பெறலாம்.

அடியேன் குருடர் ஒருவருக்கு தீட்சை கொடுத்து அவர் உணர்வு பெற்று தவமியற்றிவருகிறார்.

“முயற்ச்சி திருவினை ஆக்கும்”

விடாது வைராக்கியத்தோடு கடுமையான தவம் செய்தால் திருவான கண்மணி ஒளி வினைகளை சுட்டு நம்மை திருவாக - இறைவனாக ஆக்கும்.

நாம் - நம் உயிர் - நம் ஆன்மா தானே இறையம்சம். வினை அகன்றால் இறைத்தன்மையே மிஞ்சும். அதுதானே நமக்கும் வேண்டும்.

“தெய்வத்தாலாகாது எனினும் முயற்சிதன்

மெய் வருத்தக் கூலிதரும்.”

“எல்லாம் அவன் செயல்” “அவனன்றி ஓர் அணுவும் அசையாது” என்கிறார்களே ஆன்றோர்! வள்ளுவர் தெய்வத்தாலாகாது என கூறுகிறாரே?! அது என்ன?

நம்மிடம் தெய்வம் நம் உயிராக நம் கண்மணி மத்தியில் உள்ளே ஒளியாக உள்ளது. அதை மறைத்திருக்கிற ஐவ்வுதான் - வினை பயன். நம்மிடம் இறைவன் உள்ளே மறைந்திருக்கிறான். அவன் செயல்படமுடியாமல் நம் வினைப்பயன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாம் நம் மெய் - உடல் வருத்த சாதனை செய்தால் - மெய்யாகிய கண்கள் ஒளி பெருக அதை நினைந்து நெகிழ்ந்து உணர்ந்து தவம் செய்தால் அடைந்தே தீருவேன் என வைராக்கியத்தோடு சாதனை செய்தால் ஐவ்வு விலகும். தெய்வம் வெளிப்படும். அதன் பிறகுதான் நம் உள் உள்ள ஜோதியாகிய ஆத்மா செயல்படும் எனக் கூறியுள்ளார்.

அதுவரை நம் ஆத்மாவாகிய தெய்வத்தால் ஒன்றும் ஆகாது! நம்முள் இருக்கும் தெய்வத்தை நாம் தான் செயல்பட வைக்கணும். அதற்கு நம் முயற்சி அதி தீவிரமாக இருக்க வேண்டும்.

கூலி - இறைவன் வெளிப்படுதல். நாம் நம்மை உணர்தல் பரிசாக கிட்டும்.

சிவம் சக்தியிழந்து நிற்கிறது நம்மிடம் நாம் சக்தியுடன் தவம் செய்தால் நம் இடது கண் சக்தி - 16 கலையிலிருந்து செங்கதிரோன் வலது கண் சூரியன் 12 கலைகள் சேர்ந்ததும் சக்தியின் எஞ்சிய 4கலை அக்னி கலையோடு சேர சிவத்திற்கு சக்தி கிடைத்து பெருஞ்ஜோதியாக வெளிப்படும்.

பார்வதி - பார்வை சக்தி இருக்கின்ற இடம். பார் + வதி. சக்தி சிவத்தோடு சேர்தலே முக்திக்கு வித்து. சிவம் வெளிப்படும்.

குருடர்களுக்கு பார்வை சக்தி - பராசக்தி - பார்வதி இல்லாததால் சிவம் வெளிப்படாது! ஒளி கிட்டாது. கிட்டுவது மிக மிக கடினம். முயற்சி செய்தால் இறையருளால் சற்குரு அருளால் பார்வதி - பார்வை சக்தி கிட்டி அதனால் தவம் ஊசிமுனையில் நின்று தவம் செய்தால் கிட்டும் சிவம்.

இங்ஙனம் சாதனை செய்தால் சிவமாகிய பேரொளி தோன்றும். மரணமிலா பெருவாழ்வு கிட்டும்.

நாம் ஆரோக்கியமாக வாழ சித்தர் பெருமக்கள், வள்ளலார் பல உபாயங்களை கூறியிருக்கிறார்கள்.

அதில் ஒன்று அறுசுவை உணவு உட்கொள்தல்! நாம் தினமும் அறுசுவை உணவு சாப்பிட வேண்டும். நோயே வராது. நம் உடலில் தச நாடிகளில் முக்கியமானது வாதநாடி பித்தநாடி சிலேத்தும நாடி ஆகிய மூன்று. இம் மூன்றும் சீராக இயங்க வேண்டுமெனில் ஆறுசுவை உள்ள உணவு உட்கொள்ள வேண்டும். மூன்று நாடிகளுக்கும் தேவையான ஆறுசுவை உணவு உட்கொள்பவன் நல்ல ஆரோக்கியமாக வாழ்வான்.

சுவைக்காக உண்ணலாகாது என்பதற்காகத்தான் அறுசுவை உணவு என்றனர். நம் நாக்கு ருசி பார்க்கக்கூடாது. உடல் தேவைக்கு உண்ண வேண்டும். சுவை அற வேண்டும். “நாக்கு ருசி கொள்வது நாறிய புண்ணாக்கு” என வள்ளலார் கூறுகிறார். ருசித்து சாப்பிடாதே. உயிர்வாழ சாப்பிடு என்பதே ஞானிகள் உரைத்தது. அதனால்தன் ஆறுசுவை என கூறாமல் அறுசுவை என கூறினார்கள்.

சுவை அற்றுப் போனவனே உம்மை சாதகன்.

தவம் விடாது செய்பவனுக்கு ஒரு சமயத்தில் ஆகாரமே வேண்டாம். இது ஒரு நிலை.

ஆரம்பகால சாதகர்களுக்கு தவத்தால் பித்தம் கலங்குவதால் அதிகமாக இனிப்பு சாப்பிட தோன்றும். நிறைய இனிப்பு சாப்பிடுவார்கள்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் நிறைய இனிப்பு சாப்பிடுவார். சுவைக்கு சாப்பிடவில்லை. உடல் நிலை மாறி வருகையில் உடலுக்கு தேவை, இனிப்பு முக்கியம். அறுசுவை உணவு ஆடம்பரமல்ல தேவையான ஒன்று.

நமது வள்ளல் பெருமான் அவர்கள் கடைசியில் உணவு கொள்வது எப்போதாவதுதான்! பலநாட்கள் உணவு கொள்வது கிடையாது. அப்போது 1லிட்டர் தண்ணீரில் சிறிது வெல்லம் கலந்து 1/4 பங்காக சுண்ட காய்ச்சி கொதிக்க கொதிக்க அப்படியே வாங்கி குடிப்பார். தண்ணீர் கொடுப்பவர் இடுக்கியில் பிடித்து கொடுப்பார். நம் பெருமான் அதை வெறுங் கையில் வாங்கி குடிப்பார். எவ்வளவு உஷ்ணமும் தாங்கும் தன்மையில் அவர் உடல் இருந்தது.

ஒரு சமயம் அன்பர்களுடன் சிதம்பரம் சென்று வடலூர் திரும்புகையில் பெருமழை பெய்தது. ஒதுங்க இடமில்லா பொட்டல்காடு வழியாக வந்தனர். எல்லோரும் மழையில் நன்றாக நனைந்து விட்டனர். என்ன ஆச்சரியம் வள்ளல் பெருமான் மீது ஒருதுளி நீரும் இல்லை. அவர் உடலில்பட்ட மாத்திரத்திலே நீர் உஷ்ணத்தால் ஆவியாகிவிட்டது. எல்லா அன்பர்களும் பார்த்து வியந்தனர்.

இனி ஒரு சமயம் ஒரு அன்பர் வள்ளலார் பாத்ததை தொட்டு வணங்க விரும்பினார். வள்ளல் பெருமானும் அருள் புரிந்தார். நம் அன்பர் பாதத்தை பார்த்தார். தொட கை வைத்தார். ஒன்றும் இல்லாமல் இருந்தது. கண்ணுககு புலப்பட்ட பாதங்கள் கைக்கு அகப்படவில்லை.

ஒளியுடல் பெற்ர பெருமான் உடல் தோன்றியதே தவிர பருவுடலன்று! ஸ்பரிசம் செய்ய இயலாத தன்மையுடையது!

இன்னொரு முறை வழியில் ஓர் அரவம் பெருமானை தீண்டியது. அந்தோ பரிதாபம். அவ்வரவம் மாண்டது! சாதாரணமாக அரவம் தீண்டியவர்கள்தான் இறந்துபோவர். இங்கே நம் பெருமானை தீண்டிய அரவம் இறந்து போனது!

ஒளியுடல் பெற்றவர் நிலை!

ஆறாறுக்கு அப்பாலே ஆனந்த பரவெளி கண்டவர் பிறப்பதிலலை இறப்பதில்லை அதற்கப்பாலும் சென்றவர் சித்த புருஷ்ர்கள் ஞானிகள். வள்ளல் பெருமான் அது போன்ற உன்னத நிலையடைந்த மகானுபாவர்!

தர்மச்சாலையிலே தினமும் வரும் மக்களுக்கு அருளுரைகள் வழங்குவது வள்ளலாரின் வழக்கம். நம் வள்ளல் பெருமான் அருளுரை கேட்க, ஒரு அன்பர் தோட்டப்பாதையில் வரும் வழியில் ஒரு நல்லபாம்பு எதிர்பட பயத்தில் அன்பர், இராமலிங்கம் மேல் ஆணை தீண்டாதே எனக் கூறி ஒடிவந்து விட்டார். பிரசங்கம் முடிந்ததும் நம் வள்ளல் பெருமான் அந்த அடியவரை கூப்பிட்டு ஒரு வாயில்லா ஜீவனை வதைக்கலாமா? போகும்போது ஆணையை விலக்கி விடுக இதுகாறும் அது அப்படியே வாய்திறந்து சிலையாக உள்ளது என்றார். அப்போது தான் நினைவுக்கு வந்த அன்பர் போகும் போது அந்த இடத்திலேயே நின்ற பாம்பை கண்டு ஆணையை விலக்க அது அவ்விடம் விட்டு நகர்ந்தது.

வள்ளல் பெருமான் பெயர் சொன்னாலே பாம்பும்

# எ ஏழாம் இடம்

ஒரு மனிதன் தன் உடலில் உள்ள கண்களாகிய - மெய்ப் பொருளை - திருவடியை இரண்டின் மகத்துவத்தை உணர்ந்து, குரு உபதேசம் பெற்று, மூன்று நிலையங்களை அடைந்து, நன்னாலும் கடந்த அந்த நிலையை, ஐந்தும் ஒன்றான திருவடியை அடைந்து ஆறாறுக்கு அப்பால் சென்றவரே மரணமிலா பெருவாழ்வு பெற்றவராவார்!

அவரவர் செய்த பாவ புண்ணிய வினைகளுக்கு தக்கபடி பிறந்த மனின், ஞானிகளற் உபதேசம் அறிந்து மேன்மையடைய தவம் செய்வானாகில் இனி பிறவா நிலை பெறுவான். அதற்கு, எவ்வித கெட்ட பழக்க வழக்கமும் இல்லாமல், சுத்த சைவ உணவு உட்கொண்டு, சத்தியமாக ஒழுக்கமாக வாழ்பவனாக இருக்க வேண்டும்.

திருஞான சம்பந்தர் முற்பிறவியில் சிறிது வினையே உள்ளவராயிருந்தார். பிறந்த 3 வயதிலேயே இறைவி தோன்றி அமுதம் கொடுக்க, ஞானக் குழந்தையானார்!

திருநாவுக்கரசர் முற்பிறவி வினை நிரம்ப பெற்றவராயிருந்ததால், 80 வயது வரை பற்பல இன்னல்களும் அடைந்து, விடாமுயற்சியால் பக்தியால் தவத்தால் இறைவனை அடைந்தார்.

கள்வரான வால்மீகி மகரிஷி ஆனதும் சத்திரியனான விசுவாமித்திரர் பிரம்மரிஷி ஆனதும் குஷ்டரோகியான அருணகிரிநாதர் ஒப்பற்ற ஞானியானதும் இன்னும் எத்தனையோ ஞானிகள் சித்தர்கள் உருவானதும் அவரவர் செய்த கடுமையான தவத்தால் தான்! வைராக்கியத்தோடு செய்த விடாமுயற்சியின் பலன்தான்!

இறைவனை அடைந்தே தீருவது என்ற உறுதி நமக்குள் இருந்தால் போதும். நேற்றுவரை நாம் கொடிய பாவியாக

இருந்தாலும் சரி, இன்று முதல் நல்லவனாக மாறினால் போதும் குரு உபதேசம் பெற்று தவம் செய்வோமானால் நமக்கும் கிட்டும் ஞானம்! நாமும் பெறலாம் மரணமிலா பெருவாழ்வு!

வழிகாட்டி, விழியின் மகத்துவம் உணர்த்தி வழிநடத்த, கூடவே இருந்து காத்திட வள்ளல் பெருமான் இருக்கிறார். வள்ளல் பெருமானை சற்குருவாக ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஆன்மா கடைத்தேற வழிகாட்டுவார். வாருங்கள் குமரிக்கு! வள்ளல் பெருமான் அருளை அடியேன் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்! வள்ளல் எமக்கு இட்டபணி இதுவே!

ஆறாறுக்கு அப்பாலே, ஆறு ஆதாரங்களுக்கு அப்பாலே அகண்ட பர வெளியிலே சென்றிட வாரும்! ஏழாம் இடம் சகஸ்ரதளம். 1008 மாற்று பொற்கோவில்! 1008 இதழ் தாமரை, நம் உச்சஞ்தலை.

நாம் பிறக்கும் போது நம் உச்சந்தலை மென்மையாக இருக்கும். நாடித்துடிப்பு அங்கும் அறியலாம். நாம் வளர வளர தலைப்பகுதி கடினமாகிவிடுகிறது.

நாம் உண்ணும் ஆகாரம் சத்தாகி ஒவ்வொரு ஆதாரத்தையும் அடைந்து அந்தந்த பகுதிகளுக்கு வேண்டிய சத்தை எடுத்துக் கொண்டு கழிவுகளை அங்கங்கே அகற்றி விடுகிறது. இப்படியே ஒவ்வொரு ஆதாரமாக கடந்து கடைசியில் சகஸ்தளம் வருகிறது. அங்கு சத்தை எடுத்துக் கொள்கிறது. கழிவு வெளியேற வழியின்றி போய் விடுகிறது. இப்படியே வாழ்நாள் முழுவதும் சேரும் கழிவு தலை பகுதியில் சேர்ந்து சேர்ந்து கட்டி படுகிறது. எல்லா கழிவும் வெளியேறுவது போல் இதுவும் வெளியேற்றபட வேண்டிய ஒன்றேய. ஆனால் இது சாதாரண மனிதர்களுக்கு வெளியேறுவது இல்லை!?

கீழே உள்ள ஆதாரங்கள், மலம், நீர் ஆக, கொப்புளில் அழுக்காக, மார்பில் சளியாக, தொண்டையில் கபமாக, கண்களில் பீழையாக, காதில் அழுக்காக, மூக்கில்

சளியாக, உடல் முழுவதும் வியர்வையாக வெளியேற்றி விடும்.

சகஸ்ரதள அழுக்கு கோழை எனப்படும். இது சாதாரணமாக வெளியேறாது.

இந்த அழுக்கு அதிகமானால் மூளை இயக்கம் தடை படும்! மூளை வளர்ச்சியை தடுக்கும்! பிராந்து பிடிக்கும். பைத்தியம் ஆகலாம். மனநிலை பாதிக்கும். மொத்தத்தில் மனித நிலையிலிருந்து மனோநிலை பாதிக்கப்பட்டவனாகிறான்!

மனம் பாதிக்காமல் இருக்க கோழை வெளியேறுதல் மிக மிக அவசியம்.

மனம் பாதிக்காமல் இருப்பவனே சாதாரண மனிதன்! மனதை பக்குவப்படுத்த தெரிந்தவனே, மனிதன்!

இறைவன் படைப்பில் இந்த இயக்கமும் சரியாகத்தான் நடக்கிறது. அவரவர் வினைக்கு ஏற்ப துன்பம் அமைகிறது. தப்புவதற்குத்தான் ஞானில் வழிகாட்டுகிறார்கள்.

சூரிய உதயமுன் எழுந்து பல்துலக்கி மல ஜலம் நீக்கி தந்ததுத்தி செய்ய வேண்டும் என வள்ளலார் கூறுகிறார்.

பொற்றாலை கரிசாலை தூளை தர்ஜனி விரலில் தேய்த்து வாயின் உள் நாக்கில் தொண்டையில் தேய்க்க கபநீர் தலைநீர் இறங்கும் கண் ஒளி விஷேசிக்கும் எனக் கூறுகிறார். செய்து பாருங்கள்.

நாம் நம் உடலில் உள்ள தேவையில்லாத அழுக்குகளை அகற்றினால் நல்ல ஆரோக்கியம் கிடைக்கும் நோயின்றி வாழலாம்.

உடலில் உள்ள மலங்களை நீக்கினால் உடல் ஆரோக்கியம் கிடைக்கும்!

மனதில் உள்ள மலங்களை (ஆணவம் - கன்மம் -

மாயை) நீக்கினால் ஆத்மா ஒளிரும்!

உடலையும் மனதையும் தூய்மைபடுத்துவது எப்படி என்று எல்லா ஞானிகளும் நமக்கு எடுத்துரைத்துள்ளனர்.

மலம் அதிகமானால் ஆபத்து! மலம் போகாமல் தேங்கினால் ஆபத்து! மலம் ஒரேயடியாக போனாலும் ஆபத்து!

“மலம் நீர் கட்டாது பாத்துக் கொள்க”

இதுதான் வள்ளலார் உபதேசம். இதற்கு பல பொருள் உண்டு!

மலத்தை நீர் - நீங்கள் கட்டிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது ஒருநாள் இருமுறையாவது மலம் கிரமமாக கழிய வேண்டும். மலத்தை நீர் - தண்ணீராக போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரேயடியாக பீச்சி அடித்துவிட்டால் மனிதன் தளர்ந்து போவான்! சரியான உணவு பழக்கம் இல்லாவிட்டால் இரண்டு வழியிலும் உயிர்போக வாய்ப்புண்டு!

நாம் உண்ணும் உணவு அரைவயிறு நல்ல சத்தான சுத்தமான சைவ உணவாகவும், கால் வயிறு தண்ணீராகவும், கால் வயிறு வெற்றிடமாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் உண்ட உணவு நன்கு செரிமானம் ஆகி சத்துக்கள் சரியாக கிடைக்கும். கழிவுகள் கிரமமாக கழியும் என வள்ளல் பெருமான் கூறியிருக்கிறார்.

நாம் எதை உண்ணலாம். எப்படி உண்ணலாம் என ஒரு தனி விளக்கமே உபதேசவாயிலாக வள்ளல் பெருமான் கூறியருளியுள்ளார்.

காலை எழுந்தது முதல் இரவு படுக்க போவது வரை ஒரு மனின் எப்படி, எப்படி இருக்க வேண்டும் என்பதை நித்திய கரும விதி என்று உபதேசம் செய்துள்ளார்.

உடல் மலங்களை நீக்குபவன் ஆரோக்கியமாக வாழலாம்!? மன மலங்களை போக்குபவனே, மரணமிலாது

வாழலாம்!?

உடல் மலத்தில், ஏழாவது ஆதாரமாக சகஸ்ரதளமாக நம் உச்சந்தலையில் உள்ள கோழை சொல்லப்படுகிறது. இதை நீக்குவது தவம் செய்பவர்களுக்கு மட்டுமே சாத்தியம்! இந்த கோழை முழுவதும் நீங்கினாலே, நம் மூளை கொஞ்சங் கொஞ்சமாக இயங்க ஆரம்பிக்கும்.

தலையிலுள்ள கோழை நீங்க ஒரேவழி தவம் செய்வதுதான்! குரு உபதேசம் பெற்று, நம் மெய்ப்பொருளாகிய - திருவடியாகிய நாம் கண்களில் உள்ள ஒளியை குரு தீட்டையின் மூலம் உணர்ந்து, அந்த ஒளியை நினைந்து உணர்ந்து தவம் இயற்ற நெகிழ்ச்சி உண்டாகும். கண்களில் கனல் பெருகும். அந்த ஞானக்கனல் உள்நாடி மூலமாக அக்னி கலயை அடைந்து அங்கிருந்து மேலே சகஸ்ரதளம் நோக்கி செல்லும் ஞானக்கனல் பெருகப் பெருக அந்த உஷ்ணத்தால் பல காலங்களாக உறைந்து போன கோழை மெல்ல மெல்ல உருகி மூக்குவழியாகவும் தொண்டை வழியாகவும் வெளியேறும். எவ்வளவு கோழை உள்ளதோ அவ்வளவு காலம் நாம் கடுமையாக தவமியற்ற வேண்டும்.

“தவம் செய்வார்க்கு அவம் ஒருநாளுமில்லை”

நாம் செய்யும் தவம், நம் ஞானத்தீயை நம் கண்வழி பெருக்கி அதனால் அது சகஸ்ரதளத்தை அடைத்து உணர்வு உண்டாகி அனலால் இளகி கோழை கரைந்து ஒழுகும் இது சாதனை அனுபவம்.

தலைப் பகுதியிலுள்ள கோழை முழுவதுமாக வெளியேறும் பட்சத்தில் மூளையின் ஒவ்வொரு பகுதியும் ஒளி அலைகளால் அதிர்வு ஏற்பட்டு கொஞ்சங் கொஞ்சமாக இயங்க ஆரம்பிக்கும். கோழையால் கவிழ்ந்து இருந்த மூளைபகுதி கனம் குறைந்ததும் மலர ஆரம்பிக்கும். அதுவரை கவிழ்ந்து இருந்த தாமரை இதழ்கள் மலர ஆரம்பிக்கும். ஒளி பிரகாசிக்க ஆரம்பிக்கும். 1008 பகுதியாக சிறுசிறு பகுதியாக மூளை இருப்பதால்தான்

1008 இதழ் தாமரை என்றனர். ஒளி - சுத்த ஒளி, பொன்னொளி எழும்பி பிரகாசிப்பதால் இதை வள்ளலார் 1008 மாற்று பொற்கோவில் என்றார்.

ஒவ்வொரு மனிதனும் தன் தலையிலுள்ள 1008 மாற்று பொற்கோவிலில், நடுநாயகமாக ஒளிவிட்டு பிரகாசிக்கும் அருட்பெருஞ்ஜோதியை தரிசிக்க வேண்டும். அவனே ஞானி. அவனே மரணமிலா பெருவாழ்வு பெறுவான்.

எத்தனையோ பிறவிகள் பிறந்து விட்டோம். இனிமேல் இந்த விளையாட்டு, வினை - ஆட்டுவிக்கும் பிறவி வேண்டாம்! பிறந்த இப்பிறப்பில் தானே இனி பிறவாமல் இருக்க இறவாமல் இருக்க வழி தேடுவோம். விழியிலே இருக்கும் ஒளியை உணர்ந்து மேன்மையடைவோம். வாரீர் ஜெகத்தீரே!

ஈரேழு உலகங்கள் என்பார்! ஏழேழு பிறவிகள் என்பார்! புல்லாய் பூடாய் பல் விருகமாகி மனிதராய் பிறந்த பிறப்பு என்பார்! இது ஒன்றும் நமக்கு தெரியாது?! இதை ஆராய்ந்து கண்டு பிடிப்பதை விட எடுத்த இப்பிறவியைப் பற்றி அறிவதுதான் புத்திசாலித்தனம்!

முன்னோர்கள் சொன்னவைகள் எதுவும் பொய்யல்ல! அதை நம் சிற்றறிவு கொண்டு அறிய இயலாது! முதலில் நம் அறிவை துலங்கச் செய்ய வேண்டும். நம் அறிவு பிரகாசிக்குமானால் உண்மை எது? என நாம் அறிந்து கொள்ளலாம். அறிந்து கொள்வதே அறிவு! உணர்ந்து கொள்வதே தெளிவு!

நாம் இப்போது இருக்கிறோம். இது மட்டுமே! நாம் அறியும், உணரும் விஷயத்தை எடுத்துக் கொண்டு தவத்தில் இறங்க வேண்டும். அப்புறம்தான் நமக்கு தெளிவு பிறக்கும்! அறிவு துலங்கும்! ஞானம் உண்டாகும்!

அதற்கு வழி காட்டுவதே வள்ளல் யார் எனும் இந்நூல்.

சப்தஸ்வரங்கள், சப்தரிஷிகள், சப்த மாதர்கள், சப்த

தாதுக்கள்! எல்லோரின் அனுபவத்திலும் இதைபோல இன்னும் பல தெளிவும் பெறலாம்! இதைப் பற்றிய விபரங்கள் நாமே நம் அனுபவத்தில் கண்டு கொள்ளலாம்.

வள்ளல் பெருமான் ஏழு திரைகளைப் பற்றி குறிப்பிடுகிறார். கண்மணி ஊசிமுனை துவாரத்தை மறைத்துக் கொண்டிருக்கும் ஜவ்வு ஏழுதிரைகளாலானது! நாம் கண்மணி ஒளி உணர்வை குரு மூலமாக பெற்றுக் கொண்டு தவம் செய்யும்போது ஏழு வர்ண ஒளி காட்சி கிடைக்கும் ஒவ்வொரு வண்ணமாக மாற மாற நாம் முன்னேறுகிறோம் என்று பொருள்! முடிவில் அருட்பெருஞ் ஜோதி தரிசனம் கிடைக்கும்.

நம் ஆத்ம தரிசனம் கண்டபின் பெறும் அனுபவ நிலையை ஏழாம் இடத்தில் பெறலாம். ஏழாம் இடமே நாம் வெட்ட வெளிக்கு எழும் இடம். நம் வினைகள் இல்லாமலாகி முழு ஞானம் பெறுமிடம்.

சோதிட சாஸ்திரத்தில் ஏழாமிடம் களத்திரஸ்தானம் என்பர். நம் உடலில் உல்ள ஏழாமிடமே ஆத்மாக்களாகிய நாம் பரமாத்மாவாகிய களத்திரர் - கணவனை சேரும் இடம். எவ்வளவு உன்னதமான நிலை பாருங்கள்!

கோவில்களில் 9-ம் திருவிழா காலை தேரோட்டம் நடைபெறும். இரவு சப்தா வர்ணம் என்பர். எல்லா மூர்த்திகளும் கோவிலுக்கு வெளியே வைதது அலங்காரம் செய்து முக்கியமாக 7 வர்ணங்களில் ஆடை ஆபரணங்கள் பூமாலைகள் சார்த்தி ஊர்வலமாக எடுத்து வருவர். வாண வேடிக்கை காட்டுவர். பல வர்ண ஒளி மத்தாப்பு கொழுத்தி காட்டுவர். ஏன்? சப்தாவர்ணம் 7 வர்ணம். இறைவன் வெளிப்படுமுன் 7 வர்ணம் தோன்றும் என்பதை பக்தர்களுக்கு பாமரர்களுக்கு சாட்சியாக காட்டிச் சென்றனர் நம் முன்னோர்கள். இது பக்தி வெளிப்பாடு! வெளி நிலை!

இதையேத்தான் வள்ளலார் ஞான நிலையில் சத்திய ஞான சபையில் ஜோதி தரிசனமாக காண்பித்தார்கள்.

இறைவனை தரிசிக்குமுன் ஏழு கலர் திரை அமைத்து இவை நீங்கினால் தான் ஜோதி தரிசனம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டினார்கள். பக்தியில் சப்தாவர்ணம்! ஞானத்தில் ஏழு திரை!

எழுவகை பிறவி என்பர். அதில் அரிதினும் அரிதானது மானிடப் பிறவியே. பெறுதற்கரிய இம்மானிட பிறப்பில்தான் நாம் குருவை பெற்று தவம் செய்து பிறவிப் பிணியிலிருந்து விடுதலையடைய முடியும்.

அகத்தியர் ஏழு கடலையும் குடித்து விட்டார் என புராணம் கூறும். நம் உடலில் 7 ஆதாரமும் 7 கடலில் சம்பந்தப்பட்டுள்ளது. நம் சாதனையால், உஷ்ணத்தால் நம் அகத்திலிருக்கும் ஈசன் - சிவம் - ஒளி ஈர்த்து சுண்ட வைத்து விடும்.

நாம் தியானம் செய்யச் செய்ய நம் சரீரத்தில் உள்ள சரிபாதிக்கு மேலான ஈரமும் நம் ஞானக் கனலால் உறிஞ்சப்பட்டு வற்றிவிடும். நம் வெம் காயம் ஈரமின்றி சுக்குபோல் வற்றிவிடும். அதாவது சுத்த உஷ்ணம் பெருகும் - ஒளி பெருகும். இவ்வாறு ஒளி ஒவ்வொரு நாடி வழியாக ஊடுருவி நம் ஊன உடல் முழுவதும் ஒளி உடலாகி விடும்.

ஞானிகளை அடையாளம் காண இது ஒரு வழி. யார் உடல் மெலிந்து என்புதோல் போர்த்திய உடலாக இருக்கின்றார்களோ? அவர்கள்தான் ஞானி!

நன்றாக உண்டு கொழுத்து இருப்பவர் ஞான நிலையிலுள்ளவ் அல்லர்!

ஞான் - நீ! மலையாளத்தில் சொல்வார்கள். “ஞானும் நீயும் ஒன்னு என்னும் பாவம் வந்தால் அவன் தன்னே ஞானி” எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி வாழ்பவரே ஞானி!

பைபிளில் சாத்தானை 777 எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று சாத்தான் வெளிப்பட்டுவிட்டான். கம்ப்யூட்டர் உலகில் இண்டர்நெட் தொடர்பு WWW எனத்தானே ஆரம்பிக்கிறது. நியூ மராலஜி படி Wக்கு 7ம் எண். WWW என்பது 777 சாத்தான் வேறு யாருமல்ல உலகமுழுவதும் பரவியுள்ள இண்டர்நெட் கலாச்சாரம் தான்!! இண்டர்நெட் சாத்தான் தானே இன்று உலகை ஆட்டிப்படைக்கிறான்?! நல்லதுக்கு பயன்படுவது மிகமிகக் குறைவே.

விஞ்ஞான வளர்ச்சி மனிதனை அழிவுப் பாதைக்கு கொண்டு போகிறது. மெய்ஞானமே மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது.

தனி ஒரு மனிதன் திருந்தாவிட்டால் நாடு சுபிட்சமடையாது! என்று மனிதன் ஆன்மீக பாதையில் செல்ல ஆரம்பிக்கிறானோ அன்றுதான் நாடு முன்னேறும். நாமும் வாழலாம்.

ஒரு சமயம் தர்மச்சாலையில் நம் பெருமான் அருளுரை கேட்க வந்தவர், நம் பெருமான் தலையில் துணியால் ஏன் முக்காடிட்டுள்ளார் என அறிய விரும்பினார். இதை உணர்ந்த நம் பெருமான் கூட்டம் முடிந்ததும் அவரை தனியே அழைத்து நீ இதைத்தானே பார்க்க விருபினாய் என கூறி முக்காடை விலக்க ஒரே ஒளிப்பிரவாகம். பார்த்தவர் பார்க்க இயலாது மூர்ச்சித்து விழுந்தார். சிறிது நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து வணங்கி போயினார்.

இன்னொரு சமயம் நவகண்டயோகம் எனும் சாதனையிலிருந்தார் வள்ளல் பெருமான். அச்சமயம் திடீரென அங்கு வந்த அன்பர் வள்ளலாரின் உடல் பல துண்டுகளாக கிடப்பதை பார்த்து அலறிவிட்டார். உடனே வள்ளலார் அவர் முன் தோன்றி இது யோகத்தில் ஒரு வகை, இதுபோல திடீரென வரக்கூடாது பயப்படாதீர் என சொல்லி அனுப்பினார். எல்லாவகையான யோக ஞான அனுபவங்களையும் நம் வள்ளல் பெருமான் பெற்றிருந்தார்.

இரவு பகலாக எந்நேரமும் இறைவனை துதிப்பதும்

சாதனை செய்வதுமே வள்ளல் பெருமானின் பணியாயிற்று. வள்ளலை நெருங்கி நெருங்கி வள்ளலார் ஆகிவிட்டார்.

வள்ளலார் மிகப்பெரிய ஞானி. உன்னதமான சக்தி படைத்த சித்தர் என்பதை அறிந்த பலரும் வள்ளலாரை அடுத்து உபதேசம் பெறலாயினர். சிலர் அவரிடமிருந்து சித்துக்கள் பயில விரும்பி வரலாயினர்.

அப்படி ரசவாதம் படிக்க ஒருவர் வந்தார். வள்ளல் பெருமான் அவருக்கு இரைவன் மகத்துவத்தை உபதேசித்தார். அவரே ரசவாத வித்தை ஒன்றிலேயே நாட்டம் உடையவராயிருந்தார். ஒருநாள் அவர் வந்தபோது அவரிடம் தரையிலிருந்து ஒருபிடி மண் எடுத்து கேட்டார்.

# அ எட்டைப் பிடி

எட்டை எல்லோரும் வெறுப்பர் உலகில். ஆனால் இந்த எட்டு தான் நம்மை ஆள்கிறது.

இன்று அஷ்டமி நல்ல காரியம் செய்ய கூடாது என்கின்றனர். அஷ்டமியில் தானே "கண்ணன்" பிறந்தான். கண்ணன் பிறந்தநாளை வெகு விமரிசையாக கொண்டாடுகிறோமே!

நம் எட்டாக உள்ள கண்கள் தான் கண்ணன் இருப்பிடம், இது ஞானம்!

நம் முன்னோர்கள் பலரும் இந்த எட்டை பலப்பல பரிபாஷைகளில் பாடியருளியுள்ளனர். இரண்டு பூஜ்யத்தை தொட்டபடி போட்டால் அது எட்டு. 00 நிமிர்ந்து நின்ற எட்டை படுக்க வைத்ததுபோல்! 8 - 00 இரண்டு கண்கள் போலுள்ளதல்லவா?

"பூஜ்யத்துக்குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன், அவனை புரிந்து கொண்டால் அவன் தான் இறைவன்" என கவியரசு கண்ணதாசன் பாடியுள்ளார்.

எவ்வளவு பெரிய ஞானம் பாருங்கள்! பூஜ்ய ஸ்ரீ என பெரிய மகான்களை அழைப்பார்களல்லவா? பூஞ்ய மகிமையை அறிந்தவர் என்று பொருள்.

நமது உடலில் பூஜ்யம் போல இருப்பது கண்மணி தானே! அதன் உள்-மத்தியினுள் ஊசிமுனை வாசல் உள் ஒரு இராஜ்ஜியம் உண்டு!

அதைத்தானேநாமறிய வேண்டும். அந்த இராஜ்ஜியத்தின் ராஜா - நம் கண்ணன்தான்! கண் அவன் தான்! கண் ஒளி தான் அவன். கண்ணன் வாயை திறந்தான் எல்லா

உலகும் தெரிந்தது என்றுதானே பாகவதம் கூறுகிறது. நம் கண் அடைபட்டுள்ளதல்லவா? அந்த ஊசிமுனை துவாரம் திறப்பதை தான் கண்ணனாகிய கண்மணியின் அடைத்தவாசல் திறப்பதைதான் கண்ணன் வாய் திறந்தால் அந்த இராஜ்ஜியம் பூராவும் தெரியும் என்றதாகும்.

இந்த எட்டான இரு கண்களிலும் வலது கண் அ என்னும் தமிழில் முதலெழுத்து என்றும் தமிழ் எண்ணில் எட்டை குறிக்கும் என்றும் இலக்கணம் கூறும்.

உ என்பது தமிழ் எண்ணில் இரண்டை குறிப்பதாகும்! இது இடது கண்ணை குறிக்கும்! இதுதான் பரிபாஷை!

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்"

இது ஔவையார் வாக்கு! இதை திருவள்ளுவரும் ஆமோதிக்கிறார்! இப்படித்தான்!

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு".

எண்ணாக உள்ளதும் எழுத்தாக உள்ளதும் - கண்

எண்ணாகவும் எழுத்தாகவும் உள்ள ஒரே எழுத்து அ இதுதான், இரண்டு கண் என்று கூறும் வள்ளுவர் வாழும் உயிர்க்குத்தான் இது என்றார். அதாவது உயிர் வாழ (இறக்காமல் இருக்க) எண்ணாகவும் எழுத்தாகவும் உள்ள அ, உ என்ற இரண்டும் நம் இரண்டு கண்தான் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

இதைச் சொல்லித் தருபவர்தான் குரு!

உபதேசித்து உணர்த்துபவர்தான் சற்குரு!!

எட்டும் இரண்டும் அறிவித்தான் என நந்தி என திருமூலரும் கூறுகிறார்!

இன்றைக்கும் ஊர் புறங்களில் சொல்வார்கள் கேட்டிருக்கிறீர்களா? "அ.ன.உ.ன. தெரியாத பயலோடு என்ன பேச்சு" என்பார்களல்லவா? நம் முன்னோர்கள்

எட்டாகிய அ இரண்டாகிய உ தெரியாதவர்கள் அறிவிலிகள் அவர்களோடு பேசாதீர்கள் என்றே கூறியிருக்கிறார்கள்! எவ்வளவு பெரிய ஞானத்தை எவ்வளவு எளிமையாக கூறியிருக்கிறார்கள் பாருங்கள்!?

எட்டும் இரண்டும் அறியாத என்னை பட்டிமண்டபத்தில் ஏற்றினையே என மணிவாசகப் பெருந்தகை கூறியதை பாருங்கள்.

இந்தி எட்டாகிய அ வாகிய வலதுகண் தான் சூரிய கலை என்றும் இரண்டாகிய உ வாகிய இடது கண்தான் சந்திரகலை என்றும் வலதுகண் சிவம் என்றும் இடதுகண் சக்தி என்றும் கூறினர்.

இது நம் அறிவுக்கு எட்ட வேண்டும் என்பதற்காகத்தான் பலப்பல விதத்திலும் பரிபாஷையாகவும் கூறியருளினர் எல்லா ஞானிகளும்.

இது நம் உணர்வுக்கு எட்ட வேண்டும் என்பதற்காகத்தான் குரு உபதேசம் பெறுக தீட்சை பெறுக என வலியுறுத்தினர் ஞானிகள்.

இறைவன் எங்கோ எட்டாத தூரத்தில் இல்லை! நமக்கு எட்டும் தூரத்தில் எட்டாக இரண்டாக கண்களாக நம் உடலிலேயே இருக்கிறான்! நீ அதை எட்டிப்பிடி உணர்வாலே!? என்றுதான் கூறியருளினார்கள்.

எப்படியாவது எட்டின் மகத்துவத்தை மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக நம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இதை மறைமுகமாக பரிபாஷையாக பல்வேறு விதமாக கூறியருளினார்கள் ஞான வள்ளல்கள்.

நம் வாழ்வையே எட்டாக பிரித்தனர். எட்டு எட்டு வயசாக அமைத்தனர். முதல் எட்டு வயதில் சாப்பிடுதுதான் சாப்பாடு உடலுக்கு உறுதி. இரண்டு எட்டு, 16 வயதுக்குள் கற்பதுதான் கல்வி. மூன்று எட்டில் 24 வயதுக்குள் திருமணம் செய்வதே பருவத்தே பயிர் செய் என்பதாகும். நான்காம் எட்டில் 32 வயதுக்குள் பிள்ளை பெற்றுக்

கொள்வதே, ஆண் பெண் இருவர் உடலும் பக்குவமாக இருக்கும். ஐந்தாம் எட்டில் 40 வயதில் சம்பாதிக்க வேண்டும் செல்வம் சேர்க்க வேண்டும். ஆறாம் எட்டில் 48 வயதில் தன் கடமைகளை குடும்பத்தாரை கரை சேர்க்க வேண்டும். ஏழாம் எட்டில் 56 வயதில் புண்ணிய யாத்திரை போக வேண்டும். பாரத புண்ணிய பூமியிலுள்ள புண்ணிய ஸ்தலங்கள், மகான்கள் தரிசனம் அவசியம் பெறவேண்டும். எட்டாம் எட்டில் 64 வயதில் எட்டின் மகத்துவம் அறிந்து சற்குரு உபதேசம் தீட்சை பெற்று தவம் செய்வது ஒன்றே வேலையாக கொண்டு சன்னியாசியாகிவிட வேண்டும். இதுவே ஒப்பற்ற உன்னதமான வாழ்க்கை!

இந்த எட்டின் மத்துவத்தை 16 வயதில் கற்று, உலக கடமைகளையும் சரிவரச் செய்து, தவமும் செய்து கொண்டே வருவானாயில் அவன் உத்தமமான மனிதனாவான்! மகாத்மா ஆவான்! ஞானியாவான்!

ஊர் புறங்களில் வீட்டில் பெரியவர்கள் பிள்ளைகளை எங்காவது போய் எதையாவது வாங்கி வர சொல்ல மகனே “இரண்டு எட்டு போயிட்டு வா” என்று சொல்ல கேள்வி பட்டிருக்கிறீர்களா?

“நான் இரண்டு எட்டு போயிட்டு வாரேன்” என சொல்லவும் கேள்விபட்டிருக்கிறீர்களா?

இந்த சொல்லிலே 2-ம் 8-ம் வந்துவிட்டது கவனித்தீர்களா?

எண்ணாக உள்ள 8-ஐ எண் - சிந்தி என எத்தனையோ விதமாக ஞானிகள் கூறுகின்றனர். எண் ஜாண் உடம்பிலே எட்டாக - இரண்டாக இருக்கும் கண்களை அறிபவனே, அதில் உள்ள சிவமாகிய ஒளியை உணர்பவனே ஞானம் பெறுவான்.

எட்டுக்குடி முருகன் தரிசனம் பெற்றோர் ஞானிகள். எட்டில் குடியிருக்கும் ஆறுமுகன் சிவனின் ஆறு கண்ணிலிருந்து வந்த ஆறு நெருப்பல்லவா? சிவனை தரிசிக்குமுன் அவன் மகனை ஆறுமுகனை நம் இருகண்களை நாம் தரிசிக்கலாம்.

தியான அனுபவத்தில் முதலில் நம் இரு கண்களும் நமக்கு முன் காட்சியளிக்கும். அதன் பின்னரே ஒளிக்காட்சி புராணங்கள் அனைத்தும் நாம் ஞானம் பெற ஞானிகளால் பக்தியாகவும் ஞானமாகவும் எழுதப்பட்டவையே!

நம் தலை அமைப்புதான் வடலூரில் வள்ளல் பெருமான் கட்டிய சத்திய ஞானசபை. அது எண்கோண அமைப்பில் உள்ளது. வள்ளல் பெருமான், தலையில் உள் மத்தியில் ஆத்ம ஜோதி விளங்குவதை காட்டத்தான் ஜோதி தரிசனம் காட்டுவித்தார்கள்.

“சத்திய ஞான சபையை என்னுள் கண்டனன் சன்மார்க்க நீதியை நான் பெற்று கொண்டனன்” என்று நம் வள்ளலார் பாடியதை காண்!

சோதிட சாஸ்திரத்தில் எட்டாமிடம மாங்கல்ய ஸ்தானம். அதாவது பெண்ணின் தாலி பாக்கியம் பற்றி அறிவது. ஞானத்தில் எட்டாமிடம் நம் எட்டாகிய கண் (நாமெல்லாம் ஆத்மாவாகிய பெண்கள்) நம் கணவன் கண் - அவனாகவே உள்ள பரமாத்மன்.

நம் எட்டாமிடமாகிய கண் உறுதியாக நன்றாக இருந்தால் ஒளியை பெருக்கி நம் கணவனாகிய பரமாத்மனோடு கூடி நீண்ட நாள் வாழலாம். நம் மாங்கல்ய பாக்கியம் நீடிக்கும் என்பதாகும்.

எல்லாமே ஞானந்தான் இந்தியாவிலே!

எங்கும் ஞானம்! எதிலும் ஞானம்! சொல்லிலே, சுருதியிலே, கலைகளிலே, விளையாட்டிலே, சடங்கு சம்பிரதாயங்களிலே எல்லாமே ஞானந்தான்! ஞானிகளின் கருணைக்கு அளவேது? எல்லாமக்களும் எப்படியாவது ஞானம் பெறட்டுமே என எந்தெந்த விதத்திலெல்லாம் எதிலெல்லாம் ஞானத்தை சொல்லமுடியுமோ அப்படியெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள்! ஞானிகள் அருள் வள்ளல்களல்லவா? அன்பும் இரக்கமும் கருணையுமே அவர்கள் குணம்!

அடியேன், அகவை மூன்றாம் எட்டில் இந்த எட்டின்

மகத்துவத்தை வள்ளல் பெருமான் அறிய வைத்தார். வலிந்து என்னை ஆட்கொண்டார். அடியேன் அகவை ஆறாம் எட்டில் குருபீடத்தில் இருத்தி கன்னியாகுமரியில் இருந்து ஞான தானம் செய்யப் பணித்தார் வள்ளல் பெருமான்! என்னே அவர் தம் கருணை! என் உள்ளிருந்து உபதேசிப்பதும் தீட்சை வழங்குவதும் வள்ளல் பெருமானின் அருளில் ஒரு துளியேயாகும்!?

சூட்சும நிலையில், ஒளியுடலாகி இன்றும் எங்கும் வந்து மரணமிலா பெருவாழ்வு எல்லோரும் பெற நம் பெருமான் வள்ளல் இராமலிங்கர் பணியாற்றி வருகிறார்! அவர் பாதம் பணிவதே நம் கடன்!

சுத்த சன்மார்க்கத்தின் மரபு சாகாத கல்வியே! "எட்டிரண்டும் தெரியாதேன் என் கையில் கொடுத்தீர்" "நம்மகன் நீ அஞ்சல் என நவின்றென் சென்னி தொட்டானை எட்டிரண்டும் சொல்லினானை"

இப்படி வள்ளல் பெருமான் பல இடங்களில் எட்டிரண்டும் அறிய வேண்டியதின் முக்கியத்துவம் பற்றியும் இறைவன் எட்டிரண்டை அறிவித்த பாங்கு பற்றியும் கூறியருளியிருக்கிறார்கள்.

திருவருட்பாவின் சாறு அருட்பெருஞ்ஜோதி அகவல். அதில் வள்ளல்பெருமான், எட்டிரண்டென்பன இயலும் முற்படி என" கூறுகிறார்.

நாம் தெய்வத்தை அடைய, செய்யும் தவத்தின் முதல்படி எட்டும் இரண்டும் என்பதே! எட்டிரண்டென்பன - இரு கண்கள் என அறிவேமல்லவா?

எட்டின் மகத்துவம் சொல்லிக் கொண்டே போகலாம். எட்டாகிய நம் கண் எப்படி உள்ளது? நம் கண்ணால் இந்த உலகையே பார்க்கிறோம். கண்ணை பார்க்க முடியுமா?

"காளத்தியான் அவன் என் கண்ணிலுள்ளான் காண் என திருநாவுக்கரசர் கூறியிருக்கிறார். காளத்தியிலுள்ள இறைவன் சிவன் என் கண்ணில் இருக்கிறார் என

தெளிவாக உரைத்துள்ளார்.

பஞ்ச பூதங்களும் ஒன்றாயிருக்கும் கண், நாம் தவத்திலிருந்தால் காணலாம்.

கண்மணி ஊசிமுனை துவாரத்தை மறைத்து கொண்டிருக்கும் ஜவ்வுதான் ஏழுதிரைகள். இது அவரவர் வினைகளுக்கேற்ப கடின தன்மையுடையதாகவே, மெல்லியதாகவோ இருக்கும்.

முன்ன வந்த மூதேவி என்றொரு சொல் உண்டல்லவா?

நாம் பாக்கும்போது முதலில் நம் மனம் செயல்படும். மனம் வினைகளுக்கேற்ப இயங்கும். முதலில் செயப்படுவது வினையின் வேலைக்காரனான மனம். இதற்கு தக்கபடி நமக்கு மீண்டும் வினை உருவாகும். இப்படியே போனால் நித்தமும் வினை உருவாகிக் கொண்டேயிருக்கும். நாம் பார்க்கின்ற இடத்தில் - இடம் இருப்பது கண் - அவன் தானே! அந்த கண்ணனிடமே நாம் செய்யும் எல்லா காரியங்களையும் சமர்ப்பணம் செய்துவிட்டால் நமக்கு வினை இல்லை. இதைத்தான் கண்ணன் கீதையில் சொன்னான். கர்மாவை செய்பவனை என்னிடம் விட்டுவிடு என்று. இவ்வாறு கண்ணனுக்கே அனைத்தும் அர்ப்பணித்துவிட்டால் நமக்கு இனி வினை இல்லை.

ஏற்கனவே உள்ள வினைதானே நாம் பார்ப்பதால் வருகிறது? அது எப்படி நாம் பார்க்கும் இடத்தில் (பார்ப்பதால்) கண்ணில் வந்தது?

இதுதானே சிருஷ்டி இரகசியம்!? ஒரு மனிதன் எப்படி பிறக்கிறான்? அவன் முற்பிறவியில் செய்தத வினையோடு பிறக்கிறான்!

இந்த வினை எப்படி? எங்கு? எப்போது? வரும்? "பற்றித் தொடரும் இருவினையன்றி வேறொன்றுமில்லை பராபரமே"

மனிதன் பிறக்கும்போதும் இறக்கும்போதும் கூடவே பற்றிக் கொண்டு வருவதும் போவதும் வினை மட்டுமே!

பிறப்பு இறப்பு என்புது உயிர் வருவதும் போவதும் தானே! கூடவே பற்றி வருகிறது என்றால் உயிர் வரும்போது உயிரோடு வந்த வினை, உயிர் பிரியும் போது அதுவரை செய்த வினையோடு போகிறது!

அப்படிஎனில் உயிரோடு சேர்ந்து தானே வினை உள்ளது. செம்பில் களிம்பு போல!? ஆத்மாவை பொதிதுள்ள வினை கண்மணி ஊசிமுனை துவாரத்தை அடைத்துள்ள ஜவ்வாகும் 7 திரையாகும்.

நாம் இறைவனை சரணடைந்தால் மட்டுமே இதிலிருந்து தப்ப முடியும்! எப்படி? “அவனருளாலே அவன்தான் வணங்கி” அவன்தாள் - இறைவன் திருவடி - ஒளி நம் கண்ணில் துலங்குகிறதல்லவா? அந்த திருவடியை சரணடைந்தால்!? அதாவது குரு உபதேசம் பெற்று தீட்சை பெற்று நம் கண் ஒளியை நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து தவம் செய்தால் நம் கண் ஒளி உள் ஒளி பெருகும்.

கண் ஒளி பெருக பெருக உஷ்ணம் அதிகமாகும். கண்ணில் சுத்த உஷ்ணம் அதிகமாகும் போது கண்மணி ஊசிமுனை துவாரத்தை மறைத்துக் கொண்டுள்ள ஜவ்வு அந்த உஷ்ணத்தால் கொஞ்சங்கொஞ்சமாக உருகி கரைந்து விடும். முற்றிலுமாக கரைவது வரை நம் தவம் தொடர வேண்டும். கண்மணியை மறைத்துக் கொண்டிருக்கும் மெல்லிய ஜவ்வு நம்வினை கரை கரைய உள்ளிருக்கும் நம் ஆத்ம ஜோதி தரிசனம் நமக்கு மெதுவாக கிடைக்க ஆரம்பிக்கும்.

கண்ணனிடம் - கண் ஒளியிடம் மனதை வைத்து எந்த காரியமும் செய்யும்போது புதிதாக வினைகள் உருவாகாது என்பது முதன்நிலை.

அந்த கண்ணனின் ஒளியை அவன் பாதம் பணிந்து பெருக்கப் பெருக்க தவம் செய்ய செய்ய அதை மறைத்துக்

கொண்டிருக்கும் வினையான ஜவ்வு கரையும் என்பது இரண்டாவது நிலை.

வந்த வினையும் கண்ணில் ஜவ்வு, வருகின்ற வல்வினை நாம் பார்ப்பதால் புதிதாக வரும் வினை இரண்டும் இறைவனை நாம் இறுக பற்றினால் விட்டுவிடும்.

“வந்தவினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்லப் போமே”

இதில் வருகின்ற வல்வினை ன்பது இரண்டு நிலையாகும். ஒன்று புதிதாக வரும் வினை. இரண்டாவது ஏற்கனவே இருந்து இப்போது வந்து சேரும் வினை.

அதாவது நாம் செய்த வினைகள் மூன்று பகுதியாகும். இந்த மானிட பிறப்பெடுத்து உடனேயே கொண்டு வந்தவினை பிராப்தம். பிறந்து பின் செய்கின்ற வினை ஆகாமியம். எத்தனையோ பிறவிகளில் செய்த வினைகள் சஞ்சிதம் எனப்படும்.

இறைவன் திருவடியில் நின்றால் இனி வினை ஆகாமியம் உருவாகாது. இறைவன் திருவடியில் நிலைநிற்க நிலைநிற்க பிராப்த வினைகள் கரைந்து போகும். மேலும் மேலும் திருவடியிலேயே ஊன்றி நிற்போமானால் பழைய சஞ்சித வினைகளும் உயிர் வழியே வந்து விடும்.

நாம் நம் உயிர் ஒளியை பெரிதாக்க தவம் செய்து வருகையில் சஞ்சித கர்மம் வருவது அந்த பெரிதான உயிர் ஒளியில்தான்! அந்த பெரிய ஞானக்கனலில் சஞ்சித வினை ஒவ்வொன்றாக வந்து விழுந்து எரிந்து சாம்பலாகிவிடும். ஆக வினை அனைத்தும் போய் விடும்.

மதியால் விதியை வெல்லலாம் என்பது இதுதான். தவம் செய்து மதியில் - சந்திரனில் நெருப்பு பெரிதாக விதியாகிய வினை வந்து வந்து எரிந்து சாம்பலாகும். இதுவே ஞானிகள் செய்வது.

“தன்னை உணர்ந்த தத்துவ ஞான யோகிகள் முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார். பின்னை வினையை

பிடித்து பிசைவர் சென்னியில் அமர்ந்த சிவன் அருளாலே” என்கிறார் திருமூலர்.

“வினையற்று போனதென்று உந்தீப” என வள்ளலார் கூறுகிறார். உன் - தீ - உந்தீ பெருக பெருக வினையற்றுப் போகும்!

இப்படி தவம் செய்து கண் ஒளி பெருகி அதனால் வினையற்றால் இனி பிறவியேது?! வினை இருந்தால்தானே பிறப்பு வருகிறது?!

வினையால் பிறந்த நாம் ஞானி ஒருவரின் அருள் கடாட்சத்தால் தவம் செய்து நம்வினையை நீக்குவோமானால் நமக்கும் பிறப்பில்லை! இறப்புமில்லை!

இதை, இந்த இரகசியங்களையெல்லாம் எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காகவே புத்தகமாக எழுதி வெளியிட வைத்துள்ளார். வள்ளல் பெருமான்!

எல்லோருக்கும் மரணமிலா பெரு வாழ்வு கிடைக்க வேண்டும் என்ற கருணை உள்ளமே வள்ளல் பெருமானுக்கு!

இறைவனை அடைய இதுவரையும் இரகசியமாக, பரிபாஷையாக இருந்தவைகளை அடியேனுக்கு தெளிவுபடுத்தி அடியேனுள்ளிருந்து உபதேசித்து எழுதி நூற்களாகவும் வெளியிட பணித்துள்ளார் ஞான வள்ளல் இராமலிங்கப் பெருமகனார்!

வள்ளல் யார் என்றால் அது வள்ளலார் இராமலிங்க சுவாமிகளே!

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளே!

வாருங்கள் உலகோரே!

மரணமிலா பெருவாழ்வு பெறலாம்!

ஒரு சமயம் ஆனி திருமஞ்சனம் சிதம்பரத்தில் நடைபெற்றபோது அதைகாண போகலாம் என சில அன்பர்கள்

தர்மச்சாலையில் வடலூரில் காத்திருந்தனர். வள்ளலாரையும் அழைத்து கொண்டு போகலாம் என்றிருந்தனர். நேரம் கடந்தது வள்ளலார் புறப்படுவதாயில்லை. அன்பர்கள் வள்ளலாரிடம் முறையிட்டபோது, வள்ளல் பெருமான் தர்மச்சாலை சுவரை காண்பித்து இதில் காண்க என்ற போது, சிதம்பரம் நடராஜருக்கு அங்கே நடந்த அபிஷேக ஆராதனைகளை வடலூர் தர்மச்சாலை சுவற்றிலே நம் பெருமான் கை காட்டிய இடத்திலே கண்டு களித்தனர். வியந்தனர். மகிழ்ந்தனர். வள்ளல் பெருமானின் அற்புத ஆற்றல்களில் இதுவும் ஒன்று.

இன்று நாம் தொலைக்காட்சி பெட்டியில் நேரடி ஒளிபரப்பு காண்கிறோம். ஆனால் 150 வருடங்களுக்கு முன் வள்ளலால் கை காட்டிய இடத்தில் சிதம்பரத்தில் நடந்த திருமஞ்சன விழா நிகழ்ச்சியை வடலூரில் தர்மச்சாலையிலே கண்டனர் அன்பர்கள். "ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு கோடியும்" கைவரப் பெற்றவர் நம் வள்ளல் பெருமான்!

வள்ளலார் வாழ்வில் நடந்த அதிசயங்கள் ஒன்றா இரண்டா? இதிலெல்லாம் இலட்சியம் வைக்காதீர்கள். இறைவன் அருள் பெறுவதே நமது ஒரே இலட்சியமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் வள்ளலார்.

வள்ளல் பெருமான் உருவாக்கிய தர்மச்சாலை சத்திய ஞான சபை சித்திவளாகம் எல்லாம் மக்களால் வள்ளலாருக்கு தானமாக கொடுக்கப்பட்ட நிலத்தில் உருவானவைகள் தாம்! மக்களால் மக்களுக்காக உருவாக்கினார் வள்ளலார்!

அரிதான மனித பிறப்பின் ஒரே இலட்சியம் "மரணமிலா பெருவாழ்வு". அற்ப விசயங்களில் மனதை செலுத்தாதீர். எல்லாம் வல்ல இறைவனையே தொழுவீர் என்றார் வள்ளலார்.

வள்ளலார் பெயர் சொல்ல என் நாவு கோடி புண்ணியம் செய்துள்ளது. வள்ளலார் திரு அருட்பா படிக்க பார்க்க என் கண்கள் கோடி புண்ணியம் செய்துள்ளது. அருட்பா

கேட்க மகா மந்திரம் கேட்க என் செவி கோடி புண்ணியம் செய்துள்ளது. வடலூர் சென்று தைப்பூச ஜோதி தரிசனம் கண்ட கண்கள் சென்ற உடல் கோடி புண்ணியம் செய்துள்ளது.

கடந்த 28 ஆண்டுகளாக சன்மார்க்க பணியாற்றி வருவதில் அடியேன் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

திருவருட் பிரகாச வள்ளல் பெருமான் அருளால் திருவடி தீட்சை பெற்று சன்மார்க்க சங்கம் 1980லிருந்து நடத்தி வருகிறேன். இதுவரை, கண்மணி மாலை, முதலான 25 நூற்கள் எழுத வைத்து வெளியிடவும் அருள் புரிந்தார் வள்ளல் பெருமான்.

கடந்த 5 வருடமாக குரு பீடத்திலமர்த்தி இதுவரை 1000 அன்பர்களுக்கு என்னுள்ளிருந்து திருவடி தீட்சையும் வழங்கி வருகிறார் வள்ளலார்.

இந்த ஆண்டு அடியேனது சீடர்கள், தைப்பூச சமயத்தில் கன்னியாகுமரியில் “தங்கஜோதி” என்ற வீட்டையும் சபையையும் கட்டி காணிக்கையாக தந்துள்ளனர்.

அடியேன் எடுத்த இந்த பிறவி புனிதமானது! வள்ளல் பெருமானின் கருணைக்கு பாத்திரமானேன்!

வள்ளலார் உரைத்த மரணமிலா பெருவாழ்வு எல்லோரும் பெற திருவடிதீட்சை கொடுத்து வழிகாட்டுவது ஒன்றே எமது பணி!

என் உள்ளிருந்து உரைப்பதும் வள்ளலாரே!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில். ✆ : 233853